# சுபீட்சம்

SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே



சுபீட்சம் மின்னிதழை பார்வையிட
www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 29.08.2023 | supeedsam.com | supeedsam@gmail.com


## திருகோணமலை- நிலாவெளி, பெரியகுளம் பகுதியில்

# விகாரையின் நிர்மாணப் பணிக்கான அனுமதி மறுப்பு

## கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அதிரடி!



(நமது நிருபர்கள்)

திருகோணமலை- நிலாவெளி, பெரியகுளம் பகுதியில் நிர்மாணிக்கப்படவிருந்த விகாரையின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க அனுமதி வழங்குமாறு கோரி மாவட்ட செயலகத்திற்கு முன்பாக பிக்குகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். குறித்த விகாரை நிர்மாணிப்பதால் காணப்படும் பிரச்சினை குறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பிக்குகளுக்கு அரச அதிபர் அலுவலகத்தில் வைத்து ஆளுநரால் விளக்கம் அளிக்கப்பட்டு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

### இடைநடுவில் நிறுத்தப்பட்ட அபிவிருத்திக்குழு கூட்டம்

## விகாரைக்கு தடை விதித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தேரர்கள் போராட்டம்!



(அபு அலா)

திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் போராட்டக்காரார்கள் உள்நுழைந்ததால் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நடைபெறவிருந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் இந்த போராட்டங்களுக்கு மத்தியிலேயே இடம்பெற்றதுடன் அபிவிருத்தி குழுவின் இணைத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரள போராட்டம் காரணமாக அரசாங்க அதிபர் காரியாலயத்துக்குள் உள்நுழைய முடியாது வேறு வழியிலேயே சென்றுள்ளார்.


அபிவிருத்தி குழுவின் மற்றைய இணைத் தலைவரான ஆளுநர் செந்தில் தொண்டமான் இந்தக் கூட்டத்தில் பிரசன்னமாகியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பெரியகுளம் பகுதியில் விகாரையை அமைக்கும் பணியை முன்னெடுக்க அமைச்சரவை அனுமதியை பெற்றுத்தருமாறு மாவட்ட செயலகத்திற்குள் புகுந்த தேரர்கள் அழுத்தம் கொடுத்துள்ளனர்.

02 ஆம் பக்கத்தில்...

## வட, கிழக்கை மட்டுமல்ல முழு நாட்டையும் தாயகமென கருதுங்கள்

## தமிழர்களுக்கு எல்லே குணவங்ச தேரர் விடுக்கும் கோரிக்கை



வடக்கு, கிழக்கை மட்டுமல்ல முழு இலங்கையும் எமது தாயகம் தான் எனக் கருதி இரண்டாவது சுதந்திர போராட்டத்துக்கு தமிழ் மக்கள் முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் என தேசத்தை பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் எல்லே குணவங்ச தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டு வளங்களை பாதுகாப்பதற்கான போராட்டமே இரண்டாவது சுதந்திர போராட்டமாகும்.

வடக்கு, கிழக்கு தமது தாயகம் என தமிழ் மக்கள் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக

02 ஆம் பக்கத்தில்...

## வட,கிழக்கில் 30 ஆம் திகதி மாபெரும் போராட்டம்!



(சுமன்)

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், இறுதி யுத்தத்தின் போது வெள்ளைக் கொடியுடன் சரணடைந்து குடும்ப உறவுகளின் கைகளினால் இலங்கை பாதுகாப்புப் படையினரிடம் கையளிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை இதுவரை இந்த நாட்டை மாறி மாறி ஆண்ட அரசாங்கம் எதுவும் இதுவரை கூறவில்லை என ஜனநாயகத்

02 ஆம் பக்கத்தில்...

## ஐ.தே.க.வுக்கு தாவும் ஐ.ம.ச. உறுப்பினர்கள்

02 ஆம் பக்கத்தில்...


"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO



Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302

Fachmann für versicherung & vorsorge

Hauptstrasse 54
6015 Luzern
Switzerland

079 8000 100

arulnages@yahoo.com

finma :34598

25605: cicero

MATHE BILDUNGSZENTRUM

கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை

பள்ளித் தலமைனத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

MATHE மட்டுமல்ல

Deutsch, Franzósisch, Englisch,Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

Oerlikon, Uster, Schaffhausen

# பேராயர் மல்கம் ரஞ்சித் மதரீதியாக சேவை செய்பவர்; ஒரு சாராருக்காக வாயை திறப்பதை நிறுத்தவேண்டும்

(கனகராசா சரவணன்)

பேராயார் றஞ்சித் மல்கம் மதரீதியா மக்களுக்கு சேவை செய்கின்றாரா? அல்லது அரசியல் ரீதியாக ஒரு இனரீதியாக ஒரு இனவாதியாக செயற்படுகின்றாரா? அல்லது எந்த நிகழ்சி நிரலிலே இருக்கின்றார். வடக்கு கிழக்கு தமிழருக்கும் இந்தியாவுக்கும் எதிரான நிலைப்பாட்டில் இருக்கின்றாரா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது எனவே மதரீதிய சேவை செய்பவர் ஒரு சாராருக்காக வாயை திறப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என நா.உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வாவிக்கரை வீதியிலுள்ள நா.உறுப்பினர் கோவிந்தன் கருணாகரனின் காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை (28) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நாட்டிலே தற்போது மீண்டும் ஒரு இனக்கலவரம் தோன்றிவிடும் என்ற அச்சம் மக்கள் மத்தியில் உருவெடுத்திருந்தாலும் இந்திய உளவு பிரிவு தங்களது அறிக்கை மூலமாக இலங்கையில் ஒரு இனக்கலவரம் ஏற்படுவதற்கான சாத்திய கூறுகள் இருப்பதாக அறிவித்துள்ளனர்.

இது வழமையாக ஒவ்வொரு தேர்தல் வரும் போது இனவாதத்தைதூண்டிவிட்டு அரசியல் செய்வது இந்த நாட்டிலே வழமையாகி விட்டது 2019 ஜனாதிபதி தேர்தலின் போதும் நாட்டில் தேவாலயங்களில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்களை சாதகமாக பயன்படுத்தி தேசிய பாதுகாப்புடன் சம்மந்தப்பட் ஒருவர் ஜனாதிபதியாக வரவேண்டும் என்ற ஒரு பிரலயத்தை கிளப்பி ஜனாதிபதி தேர்தலை வென்றார்கள்.

இதனை மையமாக வைத்து ஒரு சில சிங்கள இனவாதிகள் தமிழ் நா.உறுப்பினர்களின் வீடுகளை சுற்றி வளைக்கவேண்டும் வடக்கு கிழக்கில் பௌத்தத்திற்கு எதிராக தமிழர்கள் செயற்படுகின்றார்கள் என இனதுவேசத்தை கிளப்பி விடுவது மாத்திரமல்லாது கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டிற்கு முன்பு இரு நாட்கள் உதயகம்பன்வெலவும் புத்த பிக்குகளும் ஆர்ப்பாட்டம் செய்தனர் இதனை வன்மையாக கண்டிக்கின்றோம்.

அரசியல் அமைப்பின்படி அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் நடந்தே ஆகவேண்டும் என்பதுடன் மாகாணசபை தேர்தல் நடக்க கூடும் எனவே அடுத்த வருடம் ஒரு தேர்தல் ஆண்டாக இருக்கப் போகின்றது



இந்த நிலையில் வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயம் என்றால் கொழும்பில் சிங்களவரின் தலைநகரில் தமிழருக்கு எனவேலை என உதயகம்பன்வல கேட்கின்றார்? அவர் ஒன்றை புரிந்து கொள்ளவேண்டும் வடக்கு கிழக்கிலே சிங்களவர்கள் அடாத்தாக வந்து குடியேறியவர்கள் நாங்கள் தமிழர்கள் கொழும்பிலும் ஏனை தென்பகுதியில் அடாத்தாக வந்து குடியேறவில்லை.

கொழும்பு சிங்கள தலைநகரம் வடக்கு கிழக்கு தமிழர்கள் தாயகம் என்று தெரிவிக்கும் நீங்கள்; நாடாளுமன்றத்தில் ஒரு பிரேரணையை கொண்டு வந்து வடக்கு கிழக்கை பிரித்து எங்களை ஒரு தனிநாடாக பிரகடனப்படுத்தவும்.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் இலங்கை வரவுள்ளார் அதேவேளை சீன ஆய்வு கப்பல் வரவுள்ளது இவ்வாறு மாறிமாறி பூகோள ரீதியாகவும் உள்ளூர் அரசியல் ரீதியாகவும் இலங்கை சிக்கி தவிக்கின்றது ஏன் என்றால் இலங்கைக்கு ஒரு உள்நாட்டு வெளிநாட்டு கொள்கையும் இல்லாத அரசாங்கம் ஜனாதிபதியும் செயற்படுகின்றனரா? நடைபெற்றுவரும் இனரீதியான முறுகலை ஜனாதிபதி மௌனமாக பார்த்துக் கொண்டிருப்பது இந்த நாட்டிற்கு சுபீட்சமாக இருக்காது

பேராயர் றஞ்சித் மல்கம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் பாலம் அமைக்க இருப்பதாகவும் அதற்கு சாவசன வாக்கெடுப்பு நடாத்த வேண்டும் என்கின்ற இந்த ஆண்டகை அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு 99 வருட குத்தகைக்கு கொடுக்கும் போதும் இலங்கை வரைபடத்தையே மாற்றி கோல் சிற்றி அமைக்க கடலை மண்போட்டு நிரப்பி சீனாவுக்கு தாரைவார்க்கும் போது வாய்திறக்கவில்லை.

அதேபோன்று கடந்த காலங்களில் தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசு நவாலி தேவாலயம் உட்பட தேவாலயங்களள் மீது குண்டு தாக்குதல் மற்றும் 2009 முள்ளி வாய்க்காலில் ஒரு இலச்த்து 50 ஆயரம் மக்கள் படுகொலை செய்தபோது மற்றும் வடக்கு கிழக்கில் பல கிறிஸ்தவ வணபிதாக்கள் படுகொலை செய்தபோது வாய்திறக்கவில்லை.

ஆனால் 2019 தேவாலய குண்டுதாக்குலுக்கு நீதி கோருகின்றார் அதற்கு நாங்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதிவேண்டும் ஆனால் வடக்கு கிழக்கில் இருக்கின்ற ஆயர்களான மன்னார் ஆண்டகையாக இருந்த இராயப்பு ஜோசப் முள்ளி வாய்க்காலில் ஒரு இலச்த்து 40 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டதாக சாட்சியளித்தா.; அவ்வாறே மட்டு திருகோணமலை ஆண்டகையாக இருந்த கின்சிலி சுவாம்பிள்ளை 1990ம் ஆண்டு தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற சம்பவங்களுக்கு குரல் கொடுத்தவர். அதேபோன்று தற்போதுள்ள மட்டு ஆயர் பொன்னையா ஆண்டகை அநியாயங்களுக்கு எதிராக குரல் கொடுத்து வருகின்றார்.

ஆனால் இவர்களுக்கு மேலாக இருக்கின்ற பேராயர் றஞ்சித் மல்கம் சரத்வீரசேகர, உதயகம்பன்பல, விமல் வீரவன்சா போன்று ஒரு குறிப்பிட்ட சாராருக்காக சார்பாகவா அல்லது எந்த நிகழ்சி நிரலிலே இருக்கின்றார் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்றார்.

## அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கல்முனை கிளை காரியாலயத்திற்கு ஒரு தொகை கதிரைகள் வழங்கிவைப்பு



(எம்.எம்.ஜெஸ்மின்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கொள்கைப் பரப்புச் செயலாளரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான அல் ஹாஜ் KM.அப்துல் றஸ்ஸாக் (ஜவாத்) அவர்களினால் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கல்முனைக் கிளை காரியாலயத்திற்கு ஒரு தொகை கதிரைகள் (25) அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

## அமைச்சுகளுக்கிடையிலான ஒத்துழைப்பை வளர்க்க புதிய இணையவழி திட்டம்!

ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு செயற்பாடுகளை செயற்திறனுடன் நிர்வகிப்பதற்காகவும் அமைச்சுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை வளர்ப்பதற்காகவும் புதிய இணைய வழிமூல திட்டத்தினை ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடல் வெளிவிவகார அமைச்சில் நேற்று (28) இடம்பெற்றது.

வெளிவிவகார அமைச்சின் நடப்பு செயற்பாடுகள் மற்றும் எதிர்காலத்தில் வரவிருக்கும் பலதரப்பு ஒப்பந்தங்கள், புரிந்துணர்வு திட்டங்கள் போன்றவற்றினை செயற்திறனுடன் நிர்வகிப்பதற்காகவும் அமைச்சுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை வளர்ப்பதற்காகவும் இந்த புதிய இணைய வழிமூல வசதிகள் வடிவமைக்கப்பட்டு, ஆரம்பம் செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



பன்முகத்தன்மை கொண்ட இந்த முயற்சியானது ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு செயற்பாடுகள் தொடர்பான பின்தொடர்தல் மற்றும் கண்காணிப்பு போன்றவற்றின் வினைத்திறனான செயற்திறன்களை மதிப்பீடு செய்து அவற்றை இணையவழி ஊடக பேணுவதற்கு வசதியாக அமையும். அத்துடன் நேர விரயங்களைத் தவிர்த்து பயனுள்ள வினைத்திறனான குறைவான ஆளானி செயற்பாடுகளுடன் வேலைகளை திறம்பட செய்வதற்கும் இவ் இணையவழி திட்டமானது பயனளிக்கும்.

வெளிவிவாகர அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.யூ.எம். அலி சப்ரி தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய உட்பட ஏனைய அமைச்சுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## ஐ.தே.க.வுக்கு தாவும் ஐ.ம.ச. உறுப்பினர்கள்

ஐக்கிய தேசியக் கட்சியின் 78ஆவது தேசிய மாநாடு எதிர்வரும் செப்டெம்பர் 10ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டின் பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியில் உறுப்பினர்களாகவுள்ள பாதிக்கும் மேற்பட்டோர் ஐ.தே.கவில் இணைந்துக்கொள்ள உள்ளனர் என பாராளுமன்ற உறுப்பினர் பி.ஹரிசன் தெரிவித்துள்ளார்.

குருநாகலையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தொகுதிக்குழு கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

சஜித் பிரேமதாச, தான் ஆட்சிக்கு வந்ததும் தனக்கு உதவ பல நாடுகள் இருப்பதாக கூறுகிறார். அவருக்கு எரிபொருள் மற்றும் எரிவாயுவை வழங்கவும் பல நாடுகள் உள்ளன. அவர் ஆட்சிக்கு வரும்வரை இந்த நாட்டில் மக்கள கஷ்டப்பட வேண்டுமா? என கேட்க விரும்புகிறேன்.

எதிர்வரும் செப்டெம்பர் 10ஆம் திகதிக்கு பின்னர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் அரைவாசிப் பேர் இணைவார்கள். அரசாங்கம் முன்னெடுத்து வரும் பணிகளை நாட்டு மக்கள் ஆதரித்துள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஐ.தே.கவின் தேசிய மாநாடு எதிர்வரும் 10 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக இடம்பெற்று வருவதுடன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட பின்னர் முதல்முறையாக ஐ.தே.கவின் மேடையில் ஏறவுள்ளார்.

ஐ.தே.கவின் தேசிய மாநாட்டில் கட்சியை ஜனாதிபதித் தேர்தலுக்காக வழிநடத்தும் விசேட அதிகாரமிக்க குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது. இந்த குழுவின் ஊடாகவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான திட்டங்களை வகுக்கப்படவுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஐ.தே.க மற்றும் பொதுஜன பெரமுனவின் பொது வேட்பாளராக களமிறக்கும் முயற்சியில் ஐ.தே.க ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## வட,கிழக்கில் 30 ஆம் திகதி மாபெரும் போராட்டம்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளரும், தமிழ்ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் ஜனா தெரிவித்தார்.

எதிர்வரும் 30ம் திகதி வலிந்து காணாமல் ஆக்க்பட்ட உறவுகள் சங்கத்தின் எற்பாட்டில் இடம்பெறவுள்ள ஆர்ப்பாட்டப் பெரணிக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக இன்றைய தினம் மட்டக்களப்பில் இடம்பெற்ற ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 30ம் திகதி சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் உலகெங்கும் நினைவுகூரப் படுகின்றது. அந்த வகையில் இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், இறுதி யுத்தத்தின் போது வெள்ளைக் கொடியுடன் சரணடைந்து குடும்ப உறவுகளின் கைகளினால் இலங்கை பாதுகாப்புப் படையினரிடம் கையளிக்கப்பட்டவர்கள் இவர்கள் அனைவருக்கும் என்ன நடந்தது என்பதை இதுவரை அரசாங்கங்கள் கூறவில்லை. கடந்த 14 வருடங்களாக இந்த நாட்டை மாறி மாறி ஆளும் அரசாங்கம் எதுவும் இதற்கான பதிலை வழங்கவில்லை.

இந்த அடிப்படையில் வடக்கு கிழக்கிலே எதிர்வரும் 30ம் திகதி மன்னாரிலும், மட்டக்களப்பிலும் பாரியளவிலான ஆர்ப்பாட்டப் பேரணி வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளினால் நடத்தப்படவுள்ளது. அந்த ஆர்;பாட்டப் பேரணிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாங்கள் முழு ஆதரவையும் கொடுப்பது மாத்திரமல்லாமல் தேசியத்தின் பால் ஈர்ந்தவர்கள் அனைவரும் கூடுமான அளவிற்கு இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டு எமது உறவுகளுக்கான நீதியைப் பெற ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம் என்று தெரிவித்தார்.

இவ் ஊடக சந்திப்பில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகளான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உபதலைவர் இரா. துரைரெட்ணம், முன்னாள் கிழக்கு மாகாணசபைப் பிரதித் தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா, தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தின் உபதலைவர் பொ.செல்லத்துரை, ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வட, கிழக்கை மட்டுமல்ல முழு....

கூறுகின்றனர். இவர்கள் ஏன் இரு பகுதிகளை மட்டும் தாயகமாக கருத வேண்டும். முழு நாடும் எமது தாயகம் என கருதுங்கள். நாம் அனைவரும் இலங்கையர்கள்.

யாழ். நாகதீபம் எமது பகுதி என நாம் உரிமைகோரவில்லையா? அதுபோல தமிழ் மக்களும் முழு இலங்கையும் தமக்கானது என எண்ண வேண்டும்.

இன்று எமது நாட்டு வளங்கள் சுரண்டப்படுகின்றன. தேசிய சொத்துகள் விற்கப்படுகின்றன. சொந்த நாட்டிலேயே வாடகைக் காரர்கள்போல் வாழ வேண்டிய நிலைமை. இந்நிலைமை மாற வேண்டும்.

இந்நாடு எமது உரிமை. அதற்கு நாம் சொந்தக்காரர்கள் என்ற எண்ணம் நாட்டு மக்களுக்கு வர வேண்டும். அப்போதுதான் எமது மரபுரிமைகளைக் காக்கலாம். வளங்களை காப்பதற்கான 2ஆவது சுதந்திர போராட்டத்துக்கு அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து ஆதரவு வழங்க வேண்டும்.

அனைத்து தலைவர்களும் ஒன்றிணைந்ததன் மூலம் நாட்டுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுக்கப்பட்டது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

தொல்பொருள் என்பது ஒரு இனத்துக்குரியது அல்ல. ஒரு பழமையான ஆலயம் இருந்தால் அதனையும் அனைவரும் பாதுகாக்க வேண்டும். வடக்கு, கிழக்கில் உள்ள தொல்பொருட்களை பாதுகாக்குமாறு தமிழ் மக்களிடம் நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

கடந்த 75 ஆண்டுகளாக தமிழரோ, சிங்களவர்களோ வெற்றிபெறவில்லை. மாறாக கலவர பூமியில் தான் மோதிக்கொண்டோம்.

வடக்கிலும், தெற்கிலும் உள்ள அரசியல்வாதிகளின் சூழ்ச்சிக்குள் சிக்கிவிட வேண்டாம்.

இலங்கையர் என்ற முறையில் நாம் அனைவரும் பிரதேச இனவாதமின்றி இந்நாட்டை கட்டியெழுப்புவோம் எனவும் தெரிவித்தார்.

## திருகோணமலை- நிலாவெளி, பெரியகுளம்....

இந்நிலையில் மாவட்ட செயலகத்தில், திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்த நிலையில், ஆர்ப்பாட்ட காரர்களால் இக்கூட்டம் இடைநிறுத்தப்பட்டது.

திருக்கோணமலை அனைத்து இன மக்களும் வாழும் ஒரு சமூகமாகும். பிக்குகளின் செயற்பாடுகள் போல் ஏனைய இனத்தவரும் இவ்வாறானதொரு செயற்பாடுகளை முன்னெடுப்பார்களானால் அதற்கு நீங்களே ஒரு முன்னுதாரணமாக செயற்படுவீர்கள் என தெரிவித்தார்.

இது குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்,மேலும் தெரிவிக்கையில்,,

பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட கடிதத்தை மீளப்பெற்றாலும், பிரதேச சபையின் அனுமதியின்றி எந்த ஒரு கட்டுமானப்பணிகளும் முன்னெடுக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

## இடைநடுவில் நிறுத்தப்பட்ட அபிவிருத்திக்குழு கூட்டம்

பதற்றம் காரணமாக அபிவிருத்திக் குழு கூட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளதுடன், ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கிழக்கு மாகாண ஆளுநருக்கு எதிராக போராட்டம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் திருகோணமலை பிரதேச செயலாளருக்கு எதிராக போராட்டம் ஒன்று இடம்பெற்று வருகின்றது.

குறித்த போராட்டத்தை பிக்குகள் மற்றும் மக்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்து வருகின்றனர்.

திருகோணமலை மாவட்ட செயலகத்திற்கு முன்பாக இன்று காலை 9 மணிக்கு முதல் குறித்த போராட்டம் இடம்பெற்று வருகிறன்றது.

திருகோணமலை- நிலாவெளி, பெரிய குளம் பகுதியில் நிர்மாணிக்கப்படவிருந்த விகாரையின் நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

குறித்த விகாரை நிர்மாணிக்கப்படும் பட்சத்தில் இன முறுகல்கள் ஏற்படும் என திருகோணமலை மாவட்டத்தை பிரதிநிதித்துவம்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் மற்றும் சமூக ஆர்வலர்கள் மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுடைய கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

இதனையடுத்து, இனங்களுக்கிடையில் இனமுறுகல் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்யும் முகமாக ஆரம்பிக்கவிருக்கும் குறித்த விகாரையின் நிர்மாணப்பணிகளை உடனடியாக நிறுத்துமாறு ஆளுநர் உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்ததிற்கமைய விகாரையின் நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும விதமாய் கடந்த 12 ஆம் திகதியன்று இலுப்பைக் குளம் பகுதியில் வீதி மறியல் போராட்டத்தில் தேரர்கள் சிலர் ஈடுப்பட்டிருந்தனர்.

# முதன்முதலாக மட்டக்களப்பில் அமையப்பெற்ற வராகி அம்மன்









(க.ருத்திரன்)

மட்டக்களப்பு வந்தறுமூலையில் ஸ்ரீசிவ வராகி அம்மன் ஆலயத்தில் ஐம்பொன்னால் ஆக்கப்பட்ட திருவுருவச் சிலை கருவறையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (27) நிறுவப்பட்டது.

அடியார்களின் அரோகரா கோஷத்துடன் செந்தமிழ் ஆகமப் முறைப்படி கிரியைகள் நடைபெற்று பால்காப்பு சாத்தும் வைபவம் மற்றும் விசேடயாக பூசைகள் நடைபெற்றதுடன் செந்தமிழ் தலைமை அரிச்சினைஞ்ஞர் ஆகிய சிவத்திரு தயாழன் ஜயா குழுவினரால் நன்னீராட்டு விழா நடைபெற்று கருவறையில் அம்மன் நிறுவப்பட்டது.

இவ்வாலயமானது வரலாற்றில் முதன்முதலாக மட்டக்களப்பில் அமையப்பெற்ற வராகி அம்மன் ஆலயமாகும்.மாவட்டத்தில் வேறு எந்த பகுதியிலும் இவ்வாறான ஆலயம் அமையப்பெறவில்லையென வராகி அம்மன் அடியார்கள் தெரிவித்தனர்.வராகி அம்மன் ஆலய வழிபாடானது ஈழத்தமிழர்களால் தொண்று தொட்டு வணங்கி வந்த தொண்மையான வழிபாடாகும்.இராஜ இராஜ சோழன்,கரிகாலன்,மற்றும் சோழ மன்னர்களால் வழிபட்டு வந்த தெய்வ வழிபாடாகும். 28.8.2023.அன்று இவ்வாலயத்தில் மடையெடுப்பு வைபவத்துடன் ஆரம்பமாகிய திருச்சடங்கு நிகழ்வானது 31.8.2023 அன்று முடிவடையவுள்ளது.பூசைகள் யாவும் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சி.பிரபாகரன் தலைமையில் நடைபெறும்.இவ்வாலயத்தின் கட்டட வளர்ச்சிக்கு மத்திய கிழக்கு நாடுகளில் வசிக்கும் இளைஞர்கள், பிரதேச இளைஞர்களும் இணைந்து ஒத்துழைப்பு வழங்கினர். வராகி அம்மன் உருவச் சிலையை கனடா நாட்டில் புலம்பெயர்ந்து வசிக்கும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சிவலிங்கம் பாஸ்கரன் குடும்பத்தினர் நன்கொடையாக வழங்கயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எட்டு நாட்களைக் கொண்ட ஆன்மீக பாதயாத்திரை ஆரம்பமாகவுள்ளது





(ந.குகதர்சன்)

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் வெருகலம்பதி சித்திரவேலாயுதர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு எட்டு நாட்களைக் கொண்ட ஆன்மீக பாதயாத்திரை ஆரம்பமாகவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களின் எல்லையாக இருந்து திருவருள் பாலித்துக் கொண்டிருக்கும் வெருகலம்பதி சித்திரவேலாயுதர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு இன்று 29ம் திகதி செவ்வாய்கிழமை மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து ஆன்மீக பாதயாத்திரை ஆரம்பமாகவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சீனித்தம்பி யோகேஸ்வரன் தலைமையில் ஆரம்பமாகும் ஆன்மீக பாதயாத்திரையானது எதிர்வரும் 29ம் திகதி செவ்வாய்கிழமை மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி எதிர்வரும் 05ம் திகதி செவ்வாய்கிழமை பிற்பகல் வெருகலம்பதி சித்திரவேலாயுதர் ஆலயத்தை சென்றடையவுள்ளது.

இப்பாதயாத்திரையின் போது 29ம் திகதி மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி குறுமன்வெளி விநாயகர் ஆலயம், குருமன்வெளி நாகதம்பிரான் ஆலயம், எருவில் அம்மன் ஆலயம், எருவில் ஐயனார் ஆலயம், பட்டிருப்பு பிள்ளையார் ஆலயம், களுவாஞ்சிக்குடி மாணிக்கப்பிள்ளையார் ஆலயம், களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயம், 30ம் திகதி தேத்தாத்தீவு கொம்புச்சந்தி பிள்ளையார்; ஆலயம், மாங்காடு பிள்ளையார் ஆலயம், செட்டிபாளையம் முருகன் ஆலயம், செட்டிபாளையம் பிள்ளையார் ஆலயம்;, குருக்கள்மடம் செல்லக் கதிர்காமர் ஆலயம், குருக்கள்மடம் ஐயனார் ஆலயம், கிரான்குளம் கணபதிப் பிள்ளையார் ஆலயத்தை சென்றடையும்.

31ம் திகதி கிரான்குளம் மகா விஷ்ணு ஆலயம், புதுக்குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயம் தாளங்குடா விநாயகர் ஆலயம், தாளங்குடா சரீரம் விஷ்ணு ஆலயம், ஆரையம்பதி சிவன் ஆலயம், ஆரையம்பதி திருநீலகண்ட பிள்ளையார் ஆலயம், நாவற்குடா மாரியம்மன் ஆலயம், நாவற்குடா விஸ்ணு ஆலயம், கல்லடி பேச்சியம்மன் பிள்ளையார் ஆலயம், கல்லடி முருகன் ஆலயம், கல்லடி பிள்ளையார் ஆலயம், கீரிமடு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், மாமாங்கம் மாமாங்கேஸ்வரர் ஆலயம், 01ம் திகதி மாமாங்கம் மாரியம்மன் ஆலயம், பெரியஊரணி பத்திரகாளியம்மன் ஆலயம், கொத்துக்குளம் மாரியம்மன் ஆலயம், பிள்ளையாரடி விநாயகர் ஆலயம், மயிலம்பாவெளி ஸ்ரீ முருகன் ஆலயம், மயிலம்பாவெளி சித்தி விநாயகர்; ஆலயம், ஆறுமுகத்தான் குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயம், ஏறாவூர் பிள்ளையார் ஆலயம், ஏறாவூர் கருமாரியம்மன் ஆலயம், வெள்ளிமலைப் பிள்ளையார் ஆலயம், ரமேஷ்புரம் சித்திரவேலாயுதர் ஆலயம், சிவதொண்டர் நிலையம், கொம்மாதுறை தேவி கோயில், கொம்மாதுறை பிள்ளையார் ஆலயம், வந்தாறுமூலை விஸ்ணு ஆலயத்தை சென்றடையும்.

02ம் திகதி வந்தாறுமூலை நீர்முகப் பிள்ளையார் ஆலயம், மருங்கையடிப் பிள்ளையார் ஆலயம், சித்தாண்டி சந்திப் பிள்ளையார் ஆலயம், சித்தாண்டி சித்திரவேலாயுதர் ஆலயம், முறக்கொட்டான்சேனை மகமாரியம்மன் ஆலயம், முறக்கொட்டான்சேனை விஷ்ணு ஆலயம், சந்திவெளி புதுப் பிள்ளையார் ஆலயம், கோரகல்லிமடு சித்தி விநாயகர் ஆலயம், கிரான் சித்தி விநாயகர் ஆலயம், கிரான் அம்மன் ஆலயம், கும்புறுமூலை முனீஸ்வரர் ஆலயம், கறுவாக்கேணி முத்துமாரியம்மன் ஆலயம், பெற்றோல் நிலைய பிள்ளையார் ஆலயம், வைத்தியசாலை சித்தி விநாயகர் ஆலயம், வாழைச்சேனை புதுக்குடியிருப்பு பத்திரகாளியம்மன் ஆலயத்தை சென்றடையும்.

03ம் திகதி வாழைச்சேனை பேச்சியம்மன் ஆலயம், வாழைச்சேனை ஸ்ரீ கைலாயப்பிள்ளையார் ஆலயம், மயிலங்கரச்சை மாரியம்மன் ஆலயம், வட்டவான் சித்தி விநாயகர் ஆலயம், காயான்கேணி விஸ்ணு ஆலயம், மாங்கேணி செல்வ விநாயகர் ஆலயத்தை சென்றடையும்.

04ம் திகதி மாவடிஓடை விஷ்ணு ஆலயம், பனிச்சங்கேணி முருகன் ஆலயம், வாகரை வைத்தியசாலை பிள்ளையார் ஆலயம், வாகரை செல்வ விநாயகர் ஆலயம், வாகரை செல்வ விநாயகர் ஆலயம், வாகரை சிவமுத்துமாரியம்மன் ஆலயத்தை சென்றடையும்.

05ம் திகதி புளியங்கண்டலடி மாரியம்மன் ஆலயம், கண்டலடி பத்திரகாளியம்மன் ஆலயம், அம்பந்தனாவெளி பிள்ளையார் ஆலயம், பால்சேனை பிள்ளையார் ஆலயம், பால்சேனை நாகதம்பிரான் ஆலயம், புச்சாக்கேணி செந்தூர் முருகன் ஆலயம், கதிரவெளி வைத்தியசாலை பிள்ளையார் ஆலயம், கதிரவெளி வீரகத்திப் பிள்ளையார் ஆலயம், கதிரவெளி பத்திரகாளி அம்மன் ஆலயத்தை சென்றடைந்து பிற்பகல் வேளை வெருகல் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தை சென்றடையும் என்றும் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இப்பாதயாத்திரையில் பக்த அடியார்கள் கலந்து கொள்ளுமாறும், கலந்து கொள்பவர்களுக்கு உணவு வசதிகள் வழங்கப்படும் என்றும், கலாசார உடையும் கலந்து கொள்ளுமாறும் மேலும் தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் வறட்சியினால் 30 ஆயிரம் பேர் பாதிப்பு





(சதுஜனா அருளானந்தராசா)

நாட்டில் நிலவும் கடும் வறட்சியினால் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சுமார் 30 ஆயிரம் பேர்வரை பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை காலமும் இம் மாவட்டத்தில் மழைவீழ்ச்சி எதுவும் கிடைக்கப் பெறாததால் வரட்சியான காலநிலை மாற்றமின்றி தொடர்ந்து நிலவுகின்றது. இதனால் மாவட்டத்தின் 6 பிரதேச செயலக பிரிவுகளில் 8 ஆயிரத்தி 892 குடும்பங்களைச் சேர்ந்த 29 ஆயிரத்தி 508 நபர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் செங்கலடி பிரதேச செயலக பிரிவில் 2561 குடும்பங்களைச் சேர்ந்த 8805 நபர்கள் அதிக பட்சமாக வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் கோறளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலக பிரிவில் 2161 குடும்பங்களைச் சேர்ந்த 6856 நபர்களும், மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவில் 1729 குடும்பங்களைச் சேர்ந்த 6300 நபர்களும், போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலக பிரிவில் 1438 குடும்பங்களைச் சேர்ந்த 4341 நபர்களும், மண்முனை தென்மேற்கு பிரதேச செயலக பிரிவில் 853 குடும்பங்களைச் சேர்ந்த 2681 நபர்களும் கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலக பிரிவில் 150 குடும்பங்களைச் சேர்ந்த 525 நபர்களும் வறட்சியால் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் தேசிய அனர்த்த நிவாரண சேவை திணைக்களத்தினால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

# சமுதாய சீர்திருத்தக் கட்டளை

(சதுஜனா அருளானந்தராசா)

குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை சமுதாய மயமாக்கும் நோக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இரண்டு மாத காலத்தில் 75 பேருக்கு சமுதாய சீர்திருத்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.ஸப்றீன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி பீட்டர் போல் அவர்களின் உத்தரவின் பேரில் மட்டக்களப்பு பிராந்திய காரியாலயத்தினால் சமுதாய மயமாக்கல் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் தண்டப்பணத்தினை மாத்திரம் செலுத்திவிட்டு மீண்டும் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடுவதைத் தடுப்பதை நோக்கமாக்க கொண்டு சமுதாய மயமாக்கல் நடவடிக்கை செயற்படுத்தப்படுகிறது.

போதைவஸ்துப் பாவனை, அனுமதியற்ற மது உற்பத்தி போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை சமுதாய சீர்திருத்த கட்டளைக்குட்படுத்தி உளவள ஆலோசனை, தொழில் வழிகாட்டல், சுயதொழிலுக்கான உதவி மற்றும் மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டு குறித்த நபர்கள் மீண்டும் குற்றச் செயல்;களில் ஈடுபடாமல் இருப்பதனை நோக்கமாகக் கொண்டு இந்த நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

சமுதாய மயமாக்கல் செயற்பாட்டின் ஊடாக ஒரு குற்றச் செயலில் ஈடுபடுபவர் குறித்த குற்றச் செயலுடன் தொடர்புப்பட்ட பல்வேறு குற்றச் செயல்களை செய்வதிலிருந்து பாதுகாக்கப்படுவதாகவும் மட்டக்களப்பு சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.ஸப்றீன் குறிப்பிட்டார்.

# மட்டு வாகரையில் 15 வயது சிறுமி துஸ்பிரயோகம் 18 வயது இளைஞனுக்கு விளக்கமறியல்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தில் 15வயது சிறுமி ஒருவரை பாலியல் துஷ;பிரயோம் மேற்கொண்ட 18 வயதுடைய இளைஞன் ஒருவரைஎதிர்வரும் 7ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று சனிக்கிழமை (26) வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த 15 சிறுமியை காதலித்துவந்த 18 வயது இளைஞன் திருமணம் முடிப்பதாக சிறுமியை பாலியல் துஸ்பிரயோகம் மேற்கொண்டுள்ளதாக கிடைத்த முறைப்பாட்டையடுத்து இளைஞனை வெள்ளிக்கிழமை (25) கைது செய்ததுடன் சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்தனர். இதில் கைது செய்யப்பட்ட இளைஞனை நேற்றைய தினமான சனிக்கிழமை வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் 7ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரை பொலிசார் மேற்கொண்டுவருகின்றனர்.

# 30 ஆம் திகதி மட்டக்களப்பில் ஜனநாயக போராட்டம் வலிசுமந்த மக்களுக்கு துணையாக வருமாறும் அழைப்பு

யுத்தம் முடிவடைந்து 14 ஆண்டுகளாகியும் உண்மைகள் கண்டறியப்படவில்லை மாறாக, காணாமல் ஆக்கிய குற்றவாளிகளைப் பாதுகாக்கும் நிலையே இலங்கையில் காணப்படுவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. ஸ்ரீநேசன் குற்றச்சாட்டியுள்ளதுடன் தமிழ் உறவுகள் அனைவரும் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுத்துள்ளார்.



காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினம் 30.08.2023 அன்று உலகளாவிய ரீதியில் அனுட்டிக்கப்படவுள்ளது. அன்றைய தினம் மு.ப 9,00 மணியளவில் மட்டக்களப்பிலும் அது தொடர்பான ஜனநாயக ரீதியான போராட்டம், கல்லடிப் பாலத்தில் இருந்து,காந்திப்பூங்கா வரை நடைபவனியாக மேற்கொள்ளப்படவுள்ளது. இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், யுத்தம் முடிவடைந்து 14 ஆண்டுகளாகியும் உண்மைகள் கண்டறியப்படவில்லை. நீதி வழங்கப்படவில்லை. இனியும் காணாமல் ஆக்கப்படுவதைத் தவிர்ப்பதற்கான உத்தரவாதம் அளிக்கப்படவில்லை.இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படவில்லை.

மாறாக,காணாமல் ஆக்கிய குற்றவாளிகளைப் பாதுகாக்கும் நிலை இங்கு ஏற்பட்டுள்ளதோ என்று மக்கள் ஐயப்படுகின்றனர். அக்குற்றவாளிகளுக்குப் பதவிகள், பதவியுயர்வுகள் வழங்கி கௌரவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதோ என்று சந்தேகிக்க வேண்டியுள்ளது.

எனவே நீதிக்கான உள்நாட்டுப் பொறிமுறையைத் தமிழ் மக்கள் நம்ப முடியாத நிலையில்,சர்வதேச நீதிப் பொறிமுறையினை எமது உறவுகள் கோர வேண்டிய நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்த நீதியான உரிமைப்போராட்டத்தில் வலிசுமந்த மக்கள் அனைவரும் கலந்து கொள்வோம். பார்வையாளர்களாக அல்லாமல்,பங்காளிகளாகி ஜனநாயக ரீதியாகப் போராட வாருங்கள் என்று அன்பாக அழைக்கின்றோம் என தெரிவித்தார்.

# எமது போராட்டங்களை நீத்துப் போகச் செய்வதற்கான பல்வேறு சதித் திட்டங்கள், அழுத்தங்களுக்கு மத்தியில் போராடிக் கொண்டிருக்கின்றோம்

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவி அ.அமலநாயகி

(சுமன்)

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பிரச்சினைக்கு ஒரு தீர்வு வேண்டும் என்பதற்காக பாதிக்கப்பட்ட சமூகமாக பல இன்னல்கள், போராட்டங்களை நீத்துப் போகச் செய்வதற்கான பல்வேறு சதித் திட்டங்கள், அழுத்தங்களுக்கு மத்தியில் போராடிக் கொண்டிருக்கின்றோம் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவி அமல்ராஜ் அமலநாயகி தெரிவித்தார்.



எதிர்வரும் 30ம் திகதி சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்படவுள்ள பாரிய ஆர்ப்பாட்டப் பேரணி தொடர்பில் தெரியப்படுத்தும் ஊடக சந்திப்பு மட்டு ஊடக அமையத்தில் இடம்பெற்றது. இதன் போது அவர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 30ம் திகதி சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் இதனை முன்னிட்டு கடந்த காலங்களில் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினால் வடக்கிலும், கிழக்கிலும் பாரிய போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். அதேபோன்று இவ்வருடமும் ஆர்;பாட்டப் பேரணியை நாங்கள் முன்னெடுக்கவுள்ளோம்.

இதுவரை காலமும் இலங்கை அரசினால் எங்களுக்கு எந்தெவொரு பதிலும் கிடைக்காத பட்சத்தில் சர்வதேச பொறிமுறையையே நாடி நிற்கின்றோம். எங்களுக்கு சர்வதேச விசாரணையொன்றினூடாகவே நீதி கிடைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியே நாங்கள் இந்தப் போராட்டத்தை நடத்தவுள்ளோம்.

அதேபோன்று இனிவரும் காலங்களில் இவ்வாறான கடத்தல்கள், காணாமல் ஆக்கப்படுதல்கள் இல்லாமல் இருப்பதற்கான உறுதிப்பாட்டினை சர்வதேசம் மேற்கொள்ள வேண்டும்.

எமது போராட்டம் வடக்கில் மன்னார் மாவட்டத்திலும், கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் மேற்கொள்ளப்படவுள்ளன. மன்னாரில் இடம்பெறும் போராட்டத்தில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் அங்கு சென்று கலந்து கொள்ளலாம். அதேபோன்று கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்லடிப் பாலத்தில் இருந்து எமது பேரணி ஆரம்பமாகி காந்திப்பூங்கா வரை வந்து அங்கு ஆர்ப்பட்டம் மேற்கொள்ளப்பட்டு பேரணி அறிக்கை வாசிக்கப்பட்டதுடன் நிறைவுபெறும். இந்தப் பேரணியில் அனைவரும் ஒன்றுதிரண்டு கலந்து கொள்ள வேண்டும்.

எமக்கு நடந்தது போன்று இனிவரும் எமது சந்ததியினருக்கு இவ்வாறான நிலைமை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவே இந்த பேரணிகளை நாங்கள் ஒழுங்கு செய்திருக்கின்றோம். அதேபோன்று இலங்கை அரசு எங்கள் பிரச்சனைக்கான தீர்வினைத் தராத பட்சத்திலேயே நாங்கள் சர்வதேசப் பொறிமுறையை நாடி போராட்டங்களை முன்னெடுக்கின்றோம்.

எங்களுக்கு நடந்த அவலங்கள் இனிவரும் எங்கள் சந்ததிக்கும் ஏற்படா வண்ணம் அவர்கள் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதற்கான உறுதிப்பாட்டை சர்வதேச நாடுகள் உணர்ந்துகொள்ள வேண்டும். இதற்காக நடாத்தப்படவுள்ள இந்தப் பேரணியில் அனைத்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், மதத்தலைவர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், இளைஞர் கழகங்கள், தேசியம் சார்ந்த அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள், வர்த்தகர்கள், சமூக சேவை நிறுவனங்கள், விடியாட்டுக் கழகங்கள், பண்ணையாளர்கள், மீனவர்கள், விவசாயிகள் உட்பட அனைத்து நலன்விரும்பிகளும் பங்குபற்றி எமக்கு ஆதரவினைத் தர வேண்டும். எமது போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு பல வருடங்கள் கடந்த நிலையிலும், எங்களது உறவுகளைத் தேடும் பயணத்தில் எம்மோடு பயணித்த தாய்மார் 187 பேருக்கு மேல் நாங்கள் இழந்து நிறங்கின்றோம். அதேபோன்று காலங்கள் கடத்தப்பட கடத்தப்பட சாட்சியங்களும் அழிக்கப்படுகின்றன. எனவே இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு வேண்டும் என்பதற்காக பாதிக்கப்பட்ட சமூகமாக பல இன்னல்களுக்கும் மத்தியில், போராட்டங்களை நீத்துப் போகச் செய்வதற்கான பல்வேறு சதித் திட்டங்களும், அணுகுமுறைகளும், அழுத்தங்களையும் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அண்மையில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமங்க அவர்கள் கூட கிழக்கில் தமிழ் மக்களுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை என்றவாறாக கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அத்துடன் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டு 05 வருடங்கள் கடந்த நிலையிலும் கூட இன்னும் ஐந்து பேருக்காவது நியாயம் வழங்கப்படவில்லை. எமது உறவுகளின் உயிர்களை வெறும் இரண்டு இலட்சம் ரூபாய்க்கு நிர்ணயம் செய்ததே தவிர அந்த அலுவலகத்தினால் நியாயமான விசாரணைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. அந்த அலுவலகத்தை நாங்கள் முற்றாக நிராகரிப்பதுடன் ஜனாதிபதியின் இவ்வாறான கருத்து பொய்யானது என்பதையும், எமது மக்கள் இந்த மண்ணிலே பல்வேறு பிரச்சனைகளுக்கு முகங்கொடுத்து, இன்னும் தம் உறவுகளைத் தேடிக்கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் இப்போராட்டம் அவருக்கு வெளிப்படுத்தும்.

எனவே எமது உறவுகளைத் தேடும் இந்தப் பயணம் வடக்கு கிழக்கு இணைந்த பயணமாக இருக்கின்றது. பாதிக்கப்பட்ட தாய்மார் நாங்கள் ஒற்றுமையோடு எமது உறவுகளுக்கான நீதியைக் கோரி இந்தப் பேரணியை ஒழுங்குபடுத்தியிருக்கின்றோம். எனவே எங்களுக்காக உரத்த குரல் கொடுக்க எமது போராட்டத்திற்கு வலுச்சேர்க்க அனைவரும் கைகோர்க்க வேண்டும் என்பதை மிகத் தாழ்மையுடனும் உரிமையுடனும் கோரி நிற்கின்றேன் என்று தெரிவித்தார்.

# மலையக மக்களின் வாழ்விடத்துக்கான உரிமை என்பது இன்று பேசுபொருள்!

## மனித அபிவிருத்தி தாபனபணிப்பாளர் கலாநிதி சிவப்பிரகாசம்

( வி.ரி. சகாதேவராஜா)

இரண்டு நூற்றாண்டு காலமாக மலையக மக்கள் பல துன்பங்களையும் துயரங்களையும் சவால்களையும் சந்தித்து வந்திருக்கின்றார்கள். இன்னும் அவர்களது வாழ்வியலுக்கான வாழ்விடத்திற்கான உரிமை என்பது பேசுபொருளாகவே இருக்கின்றது.

இவ்வாறு மனித அபிவிருத்தி தாபனத்தின் ஸ்தாபகர் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பி பி . சிவப்பிரகாசம் தெரிவித்தார்.

அண்மையில் மாத்தளை ரத்வத்தை தோட்டத்தில் இடம் பெற்ற வாழிடத்திற்கானஉரிமை மீறல் சம்பவம் தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்..

இன்று மலையகம் 200 வருட கால வரலாறு பற்றி பேசுகின்றோம் .கொண்டாடுகின்றோம். பெருமைப் படுகிறோம்.ஆனால் இன்னும் அந்த மக்களுக்கான மனித உரிமைகள் வாழ்விட உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன.

ரத்வத்தை தோட்டத்தில் ஏழை குடிமகனின் குடிசை உதவி முகாமையாளரால் பேடித்தனமாக அடித்து நொறுக்கப்பட்டது.

அங்கு எமது பிரதிநிதி திரு நடராஜா அவர்கள் நேரடியாக சென்ற பொழுது அவர்கள் அழுதழுது சோக சம்பவத்தை கூறியுள்ளனர்.



யானை உடைத்தது போன்று மிலேச்சத்தனமாக மக்களது உடைமைகளை உடைத்து இருக்கின்றார்கள்.இவர்களுக்கு அடித்து உடைக்க எந்த உரிமையும் இல்லை.

இந்த வரலாறு தொடரக் கூடாது. அவர்களது வீட்டில் ஒரு நீடிப்பு செய்தால் அதனை போலீசில் முறையிட்டு தீர்த்துக் கொள்ள வேண்டும். அதைவிடுத்து இப்படி அடித்து உடைப்பதற்கு அவர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது.

எதிர்காலத்திலே சட்ட ரீதியாக இதனை அணுக வேண்டும். ஒன்று அரசியல் ரீதியாக.. இரண்டு சட்டரீதியாக ..

இரண்டும் செய்தால் தான் மலையகம் 200 என்பது அர்த்தப்படும். இது அரசியல்வாதிகளுக்கும் சமூக ஆர்வலர்களுக்கும் சமர்ப்பணம் என்றார்.

# மட்புனித மிக்கேல் கல்லூரியில் புதிய அதிபர் கடமைகளைப் பொறுப்பேற்றார்



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் புதிய அதிபராக அன்ரன் பெனடிக் ஜோசப் நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப்பின் பங்குபற்றுதலுடன் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் அகிலா கணகசூரியம், மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி. சுஜதா குலேந்திரகுமார் ஆகியோர் முன்னிலையில் புதிய அதிபர் அன்ரன் பெனடிக் ஜோசப் கடந்த 25ம் திகதி தனது கடமைகளைப் பொறுப்பேற்றரர்.

இதன்போது சென் மிக்கோல் கல்லூரியின் நிறுவாகப் பொறுப்புகளை அதன் அதிபராக கடமைவகித்த இலங்கை கல்வி நிறுவாக சேவை உத்தியோகத்தர் ஆர்.ஜே. பிரபாகரன் புதிய அதிபர் அன்ரன் பெனடிக் ஜோசப்பிடம் கையளித்தார்.


இந்நிகழ்வில் மட்டக்களப்பு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அதிகாரி, குஈஉஇ செயலாளர், குஈஉஇ உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பாடசாலை ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நாவற்குழியில் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் போன மாம்பழம்

(த.சுபேசன்)

தென்மராட்சி-நாவற்குழி அருள்மிகு சித்திவிநாயகர் திருக்கோவிலில் 27/08 ஞாயிற்றுக்கிழமை மாம்பழம் ஒன்று ஒரு இலட்சத்து எழுபதாயிரம் ரூபாய்க்கு ஏலத்தில் பெறப்பட்டுள்ளது.

ஆலயத்தின் மாம்பழத் திருவிழா தினத்தன்று பிள்ளையாரின் திருவடிகளில் வைக்கப்பட்ட மாம்பழமே இவ்வாறு கார்த்திகேசு சிவகுமார் குடும்பத்தினரால் ஏலத்தில் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



எழுதத் தூண்டும் எண்ணங்கள் : 13

# மக்கள் சேவை மகேசன் சேவை

முடிந்தவரை நற்பணி செய்து வாழும் வாழ்க்கையே மனமுவந்து ஈசன் ஏற்கும் வாழ்க்கையதாகும்

இயற்கையின் படைப்பில் உலகிலுள்ள சீவராசிகள், இயற்கைத் தாவரங்கள் யாவும் ஒன்றைக் கொடுத்து ஒன்றைப் பெறும் உணவுச் சங்கிலியின் அடிப்படையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றுள் ஆறறிவு கொண்ட மனிதன் மாத்திரம் அறிவு, ஆற்றல், புத்தி, சிந்தனை ஆகியவற்றைப் பயன்படுத்தி வாழ்க்கையை நடாத்துகின்றான். உலகின் செயற்பாடுகள் எல்லாமே ஓர் இயற்கை ஒழுங்கின்படியே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. எல்லாவற்றையும் இறை சக்தி அவற்றுக்குள் இருந்து இயக்கிக் கொண்டிருப்பதாக நம்புகிறோம். ஒவ்வொன்றும் அந்த இயக்க சக்தியின்படி இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த உலகம் நமக்காக இறைவனால் படைக்கப்பட்டிருக்கிறது. ஆதாமும் ஏவாளும் உலகின் முதல் மனிதர்கள். அவர்கள் இருவரும் இயற்கையோடு இணைந்தே வாழ்ந்தார்கள். ஆதிமனிதர்கள் தொடக்கம் இன்றைய ஆதிவாசிகள்வரை எல்லோரும் இயற்கையை நம்பி வாழ்ந்தார்கள். வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இயற்கை கட்டுக் குலையாமல் இருந்தபோது மனிதனுக்கு முழுப் பாதுகாப்பளித்தது. இப்போது மனிதன் முழுவதையும் மாற்றிவிட்டான். அதனால், இயற்கை நம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. அனர்த்தங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

இறைவனின் படைப்புக்கள் யாவும் ஏதோ ஒரு வகையில் ஒன்று இன்னொன்றுக்கு உதவின. அவை யாவும் இயற்கையின் சமநிலையைப் பாதுகாத்துக் கொண்டிருந்தன. இயற்கையோடு ஒட்டி வாழ்ந்த மனிதன் இயற்கையை நேசித்தான். தனது வாழ்க்கைக்கு இத்தனையும் கொடுத்த இயற்கைக்கு நன்றிக் கடன் செலுத்தினான். இயற்கையை வழிபட்டான். இறைவனுக்கு வடிவமோ உருவமோ கொடுக்கவில்லை. மனிதன் இயற்கையை வழிபட்டதில் இருந்து எப்போது வடிவமும் உருவமும் கொடுத்து கோயில் கட்டி



**சோலையூர்க் குருபரன்**

வழிபட ஆரம்பித்தானோ அன்றிலிருந்து வழிபாட்டு நெறிமுறைகளும் உருவாகின. அந்த நெறிமுறையை அடிப்படையாகக் கொண்டு உலகில் மதங்கள் உருவாகின. மதங்களும் அதனை ஒட்டிய நெறிமுறைகளும் புதிது புதிதாக ஆரம்பித்ததில் இருந்து சாதி, சமயம், குலம், கோத்திரங்களும் அதிகரித்துக் கொண்டே சென்றன. அதனை அடிப்படையாகக் கொண்டு போட்டி, பொறாமை, சண்டை, சச்சரவு, வெட்டுக் குத்துக்களும் ஆரம்பித்தன. மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசைகளுக்காக யுத்தம் செய்த மனிதன் பின்னர் மதத்தின் பெயராலும் யுத்தம் செய்ய ஆரம்பித்தான். ஒரு மதத்துக்குள்ளே பல பிரிவுகள் உருவாகின. மதத் தலங்களை அடிப்படையாகக் கொண்டு பல பிரச்சினைகளும் உருவாகின. அமைதியாக இருக்க வேண்டிய வணக்கத் தலங்கள் பல சாதி, சமயம், குலம், கோத்திரம், மரபுகள், சம்பிரதாயங்கள், பழக்க, வழக்கங்களைப் பேணிப் பாதுகாக்கும் நிறுவனங்களாகவும் போட்டி, பொறாமை, சண்டை, சச்சரவுகள், முரண்பாடுகள் நிறைந்த இடங்களாகவும் மாறிக் கொண்டிருக்கின்றன.

எங்கு அமைதி, ஒழுக்கம், கட்டுப்பாடு பேணப்படுகிறதோ அங்கே நமது மனதில் இனம் புரியாத உணர்வு தோன்றும். அத்தகைய இடங்களில் மன அமைதி, சாந்தம், புரிந்துணர்வு நிலவும். இத்தகைய அமைதியைச் சில வணக்கத் தலங்களில் அவதானிக்கலாம். நமது மனம் பெரும்பாலும் அமைதியையே விரும்புகின்றன. அமைதியான சூழல் தூய எண்ணங்கள் சிந்தனைகள் தோன்றுவதற்கு வழி வகுக்கும். பல பிரச்சினைகளுக்குத் தீர்வும் மன அமைதியும் கிடைக்கும். இந்து ஆலயங்களில் நடைபெறும் விழாக்களில் இத்தகைய அமைதியைக் காணமுடியாது. ஒலிபெருக்கி எந்த நேரமும் ஒலித்துக் கொண்டே இருக்கும். ஒரு பக்கத்தில் அறிவுறுத்தல்கள், விளம்பரங்களும் சொல்லப்பட்டுக் கொண்டிருக்கும். மறுபுறத்தில் இறைவன், இறைவியர்களை ஏலம்விட்டுக் கொண்டிருப்பார்கள். பக்தர்களும் ஆடம்பர உடை, நகை நட்டுக்கள் அணிந்து ஆடம்பரமாக உலா வருவார்கள். எங்கும் எதிலும் அவசரமும் விறுவிறுப்பும் காணப்படும். ஐயர்மார் தமது தட்சணை, சம்பளத்துக்குரிய கடமையை நிறைவேற்றிக் கொண்டிருப்பார்கள். தர்மகர்த்தாக்கள் வரவு சேகரிக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள்.

மக்கள் சேவை அல்லது சமூக சேவை என்பது எந்தவிதமான கட்டளையோ, பணிப்போ, எதிர்பார்ப்போ இல்லாமல் தாமாகவே முன்வந்து உதவி, தானம், கொடை, உபகாரம செய்வதனைக் குறிக்கும். பிரதிபலனை எதிர்பார்த்துப் பேரும் புகழுக்காகச் செய்யப்படும் சேவைகள் எதுவும் மகேசன் சேவையாகக் கொள்ளப்படமாட்டாது. அத்தகைய சேவைகள் ஒருவருக்கு மகிழ்ச்சியையும் பேரையும் புகழையும் கொடுக்குமே தவிர நிம்மதியைக் கொடுக்காது. சேவை என்பது பணம், பொருள் ரீதியிலான உதவி மாத்திரமல்ல அன்பு, கருணை, காருண்யம், பரிவு காட்டுவதும் ஒருவகையில் சேவையாகவே கொள்ளப்படும். இதனை தேவை, சந்தர்ப்பம் கருதி மனமுவந்து செய்யும்போது சேவையாகக் கொள்ளப்படுகின்றன. மக்கள் சேவை மாத்திரமன்றி ஏனைய உயிரினங்கள் மீதான ஜீவகாருண்ய சேவையும் ஆற்றுதல் வேண்டும். உலகிலுள்ள சகல உயிர்களுக்கும் மூலாதாரமாக இருப்பவர் இறைவன் என்பதனால் மனமுவந்து அவற்றுக்குச் செய்யப்படும் சேவைகள் யாவும் மகேசன் சேவையாகவே கொள்ளப்படுகின்றன. இத்தகைய சேவைகளைச் செய்வதில் மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் ஆர்வம் காட்டுதல் வேண்டும்.

இன்று பலர் ஏதாவது சமூக சேவையைச் சிறிதளவு செய்துவிட்டு தம்பட்டமடித்து, ஊர்கூட்டி அம்பலப்படுத்தி, விளம்பரம் செய்து பெரிய ஒரு சமூக சேவை செய்ததாகப் பேர் வாங்கிச் செல்கின்றனர். அவரையும் மக்களையும் பொறுத்தவரையில் அது சமூக சேவையாக இருந்த போதிலும் அது மகேசன் சேவையாகக் கருதப்படமாட்டாது. இங்கு அவர் பலன் கருதிச் சேவை செய்திருக்கின்றார். இறைவன் 'ஆடை, அணிகள் ஆடம்பரங்களை விரும்புவதில்லை' தூய மனத்தையும், எண்ணத்தையும் செயலையுமே ஏற்றுக் கொள்கிறான். நமது உடலில் உயிராக அமர்ந்திருக்கும் இறைவன் எது உண்மை? எது பொய்? எது அசல்? எது நகல்? என்பது பற்றி நமது உள்ளத்திலும் மூளையிலும் எண்ணம், சிந்தனை உருவாகும் போதே அறிந்து கொள்கிறான். நமது உடலில் இறைவன் உயிராக இருக்கும் வரை யாரும் ஒளித்து மறைத்துவிட முடியாது. இதனை எல்லோரும் விளங்கிக் கொண்டால் யாரும் எண்ணம், சொல், செயல்களால் பழி, பாவம் செய்யமாட்டார்கள்.

மரபுகள், சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்கள், ஒழுக்க நெறிமுறைகள் யாவும் காலத்துக்குக் காலம் மனிதனால் உருவாக்கப்பட்டவை. மனிதன் தனது தேவை கருதியும், தனக்குக் கீழுள்ளவர்களை கட்டுப்படுத்தி வைத்திருப்பதற்காகவும் அவற்றை உருவாக்கினான். அவற்றில் பலரின் சுயநலமும் மேலோங்கி இருந்தன. அவற்றை வைத்துக் கொண்டு ஏன்? எதற்கு? எப்படி? எவ்வாறு? எனக் கேட்க முடியாமல் மூட நம்பிக்கைகளை உருவாக்கி, அந்த மூட நம்பிக்கைகளைக் கடைப்பிடித்து வாழப் பழக்கினான். இந்த நம்பிக்கைகளின்படி ஏன்? எதற்கு? எனக் கேள்வி கேட்காமல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உண்மை அறிந்து அதனை வெளிப்படுத்துபவனை மிகப் பெரிய முட்டாள், மடையன், இவன் சமூகத்தின் எதிரி என்றெல்லாம் முத்திரை குத்தி ஒதுக்கிவீடுவார்கள். மனிதர்களிடம் காணப்படும் மூட நம்பிக்கைகளையும் பலவீனத்தையும் இன்னொருவர் தனது வெற்றிக்குரிய மூலதனமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். அதனை மதத் தலங்களை மையப்படுத்திய குருமாரும், போதகர்களும், தர்மகர்த்தாக்களும், பரிபாலன அமைப்புக்களும் கச்சிதமாகப் பயன்படுத்தி நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றன. நாமும் ஏன? எதற்கு? எனக் கேள்வி கேட்காமல் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம்.

இந்துமத சமயத் தீவிரவாத அமைப்பான சிவசேனா (ஆர்.எஸ்.எஸ்) இதனையே இந்தியாவில் செய்து கொண்டிருக்கிறது. இந்தியாவில் எடுக்கப்படும் திரைப் படங்கள், தொலைக்காட்சிக் குறுந்தொடர்கள், நெடுந்தொடர்கள் நாடகங்கள், இணையத் தளங்களில் வெளியாகும் தொடர்கள் யாவும் சிவசேனாவின் கொள்கைகளை மையப்படுத்தியே எடுக்கப்பட வேண்டும். தெய்வ நம்பிக்கைகள், மூடநம்பிக்கைகள், பாம்பு, பேய், பிசாசு ஆகியவற்றை மையப்படுத்தல், பெண்களை வில்லிகளாகச் சித்திரித்தல், ஹீரோயிஸம் ஆகியவற்றை மையப்படுத்தி எடுக்கப்படாத திரைப்படங்கள் தொடர்கள் யாவும் எத்தகைய பெறுமதிமிக்க கலைப் படைப்புக்களாக இருந்தாலும் அவை இந்தியாவில் தோல்வியடையும். இந்தியா எப்போதோ வல்லரசாக மாறி இருக்கும். இத்தகைய மூடத்தனங்கள் அவற்றைத் தடுத்துக் கொண்டிருக்கின்றன. இந்தக் கொள்கையைப் பின்பற்றாத எந்தக் கட்சியும் சிவசேனாவின் அனுமதியின்றி ஆட்சி அமைக்க முடியாது. அண்மையில் மணிப்பூர் மாநிலத்தில் ஏற்படுத்தப்பட்ட கலவரமும் அழிப்பும் சிவசேனாவும் பா.ஜ.கவும் திட்டமிட்டுப் பழங்குடியினர்மீது திணிக்கப்பட்டவையாகும். அதனால் இந்தியா சர்வதேசத்திடம் தலை குனிந்து நின்றது. மதத் தீவிரவாத அமைப்புக்கள் உண்மையை உணரவிடாமல் தடுத்து மாய வலைக்குள் சிக்கி வாழ வைத்துக் கொண்டிருக்கின்றன. அவர்கள் மதத்தின் பேயரால்



தீவிரவாதக் கொள்கையினையும் மூடநம்பிக்கைகளையும் வளர்த்து மதத் தீவிரவாதிகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்றனர். இலங்கைத் தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒளிபரப்பப்படும் நெடுந் தொடர், குறுந் தொடர்களை அவதானித்தால் இந்த உண்மை தெரியவரும்.

மதவாத அமைப்புக்கள் மக்கள் சேவை மகேசன் சேவை என்பதனையும் நமது உடலுக்குள்ளே ஆதி மூலப் பொருளான இறைவன் உயிராக இருக்கிறான் என்ற உண்மையைக் கூற முன்வராது. கூறினால் மதத் தீவிரவாதம் வளர்ச்சியடையாது. மக்களும் மூடநம்பிக்கையைப் பின்பற்றமாட்டார்கள். அவர்களும் மக்களிடத்தில் தமது கொள்கைகளைப் புகுத்த முடியாமல் போய்விடும். மதம், மதத் தலங்கள் இரண்டையும் வைத்துக் கொண்டு மிக இலகுவாக மக்களை வசப்படுத்தலாம் என்ற உண்மை அவர்களுக்குத் தெரிந்ததனால் மக்களை வசப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இலங்கைத் தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒளிபரப்பப்படும் இந்தியத் திரைப்படங்களும், தொலைக்காட்சித் தொடர்களும் தமிழ் மக்களை மூடநம்பிக்கைகளுக்குள் ஈர்த்தெடுத்துக் கொண்டிருக்கின்றன. இதனைப் பெரும்பாலான தமிழ் மக்கள் விளங்கிக் கொள்ளும் நிலையில் இல்லை என்பதே நிதர்சனமாகும்.

இந்து ஆலயக் குருக்கள்மார், தர்மகர்த்தாக்கள், ஆலய பரிபாலன சபையினரில் 70 வீதத்துக்கு மேற்பட்டோருக்கு சமயம், வரலாறு, சமய தத்துவம் ஆகியன பற்றிய தெளிவு குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர். அவர்கள் எப்போதும் சார்புக் கொள்கையைக் கடைப்பிடிப்பவர்களாகவே காணப்படுவர். அவர்களிடம் பொருள் முதல்வாதக் கொள்கை மேலோங்கி இருக்கும். அந்தக் கொள்கையின் அடிப்படையிலும், பதவி, கௌரவம், செல்வாக்கு, புகழ் என்பவற்றுக்காகவும், சாதி, குடி, சாகியம், குலம், கோத்திரம், பண்டு, பரபணி என்ற வட்டத்துக்குள் நின்று செயற்பட்டுக் கொண்டிருப்பார்கள். பலர் பொருள் முதல்வாதக் கொள்கையில் இருந்து விடுபடவும் விரும்பமாட்டார்கள். அதனால் ஏனைய மதத் தலங்களில் பிரசங்கம், சமய சிந்தனைகள் செய்யப்படுவதுபோல் இந்து ஆலயங்கள் பலவற்றில் செய்யாமல் தவிர்த்து வருகின்றனர். உண்மைகள் கூறப்பட்டால் 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என நம்பி சமூகப் பணியில் ஈடுபட்டுவிடுவார்கள். ஆலயங்கள்மீது மக்களுக்கிருக்கும் பக்தியும் நம்பிக்கையும் குறைந்து கொண்டு போகும்.

'அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல், அன்னயாவினும் புண்ணியம் கோடி, ஆங்கோர் எழைக் கெழுத்தறிவித்தல்' என்றான் முண்டாசிக் கவி பாரதி. பாடசாலை செல்வதற்கு அப்பியாசக் கொப்பி, பென்சில், அழிறப்பர், பென், கணிதப் பெட்டி, சூ, சொகஸ், பாடசாலைப் பை, உடுப்புக் கழுவச் சவர்க்காரம் வாங்குவதற்குப் பணம் இல்லாமல் 30 வீதத்தக்கு மேற்பட்ட பிள்ளைகள் பாடசாலை செல்லாமல் இடை விலகிக் கொண்டிருக்கின்றனர். அந்தப் பிள்ளைகளுக்கு இந்தப் பொருட்களை வாங்கிக் கொடுத்து எதவினால் அவர்கள் சந்தோசமாகப் பாடசாலைக்குச் செல்வார்கள். 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்' உன்பார்கள். அதற்கிணங்க அவர்களின் கல்விக்கு உதவினால் அது சமூகத்துக்கான எதிர்கால முதலீடாக அமையும். அதுவே மகேசன் சேவையுமாகும். அதைவிடுத்து உற்சவங்கள், திருவிழாக்கள், கோயில் கட்டுதல், கும்பாவிசேகம், மண்டலாபிசேகம், கும்பாபிசேக ஆண்டு பூர்த்தி, சங்காபிசேகம், விசேட பூசைகள், விரதங்கள், அன்னதானங்கள் என்று பணத்தினையும் பொருட்களையும் விரயம் செய்து கொண்டிருக்கின்றனர். அந்தப் பணத்தில் ஒரு பகுதியை ஏழைப் பிள்ளைகளின் கல்விக்குக் கொடுத்து உதவினால் அதுவே மகேசன் சேவையாகவும் அமையும்.

உதவி தேவைப்படுபவர்கள், நிற்கதியானவர்கள், ஏழை, எழியோர், முதியோர், மாற்றுத் திறனாளிகள், தாய், தந்தையரை இழந்தோர் ஆகியோருக்கு உதவுவதே மக்கள் சேவையாகும். அது மாத்திரமின்றி பிரதிபலன் இல்லாமல் அறிவுரை கூறுதல், ஆலோசனை, வழிகாட்டல் செய்தல், அன்பு, கருணை, பாசம், பரிவு காட்டல், ஆறுதல் வார்த்தை கூறல், இயற்கை, மனித நடவடிக்கைகளால் ஏற்படும் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுதல். உடல் சோர்வு, நோய் காரணமாக முடியாமல் இருக்கும் போது மனமுவந்து உதவுதல், உழைப்பு வசதிகள் இல்லாமல் துன்பப்படுபவர்களுக்கு உதவுதல் எல்லாமே மக்கள் சேவையாகும். இன்றைய அரசியல் பொருளாதார நெருக்கடியின் காரணமாக மக்கள், தொழில் இழந்து, வருமானம இழந்து,, ஒரு வேளை சாப்பிடுவதற்குக்கூடத் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். 'மக்கள் சாப்பாடு இல்லாமல் தும்பப்படும்போது சாப்பிட முடியாத இறைவனுக்குப் படையலா' எனக் கூறிச் சிரித்துக் கொண்டார் ஒருபர். மக்களின் கல்வி, உணவு என்பவற்றுக்குக் கொடுப்பதற்கு முன்வராதவர்கள் கோயில் என்றவுடன் எல்லாம் கொடுப்பதற்கு முன்வருகின்றனர்.

இறைவன் அன்புக்குக் கட்டுப்படுபவன். அடியார்க்கு அடியேன் எழியார்க்கு எழியோனாக வருபவன் என நமது சமய, தத்துவ நூல்கள் விரிவாகக் கூறுகின்றன. இறைவன் நாயன்மார்களின் தூய அன்புக்குக் கட்டுப்பட்டுக் காட்சி கொடுத்தான் என பெரிய புராணத்தில் காண்கிறொம். இதனையே பூசலார், அதிபத்தர், திருநாளைப்போவார், நந்தனார், கண்ணப்பர் போன்றோரின் வரலாறுகள் உணர்த்தி நிற்கின்றன. இத்தகைய இறைவன், இறைவியர் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆடம்பரங்களை விரும்பவில்லை என்பதையும் சமய, தத்துவ, வரலாற்று நூல்கள் தெளிவுபடக் கூறி இருக்கின்றன. நாம்தான் ஆடம்பரச் செலவு செய்து பணத்தை விரயம் செய்கிறோம். அண்மையில் ஒருவர் தனது மகளின் திருமணத்தன்று வேறு எவருக்கும் அழைப்புக் கொடுக்காமல் 500 ஏழைகளை வரவழைத்து எவசில்வர் தாம்பாளத்தில் விருந்து வைத்து, வீட்டுக்குக் கொண்டு சென்று குடும்பத்தாருடன் சேர்ந்து சாப்பிடுமாறு கூறி அனுப்பி வைத்தாராம். அவர்கள் எல்லோரும் 'மகராசியாக இருங்கையா' என வாழ்த்திச் சென்றனர். மாத்தறையின் திருமனத் தம்பதியர் இருவரும் திருமணத்துக்கான ஆடம்பரச் செலவைக் கணிப்பிட்டு அந்தப் பணம் முழுவதையும் கொண்டு வீடு இல்லாத கணவனை இழந்து தவிக்கும் குடும்பம் ஒன்றுக்கு வீடுகட்டி அவ்வீட்டிலே தமது திருமணத்தையும் செய்து வீட்டினை அந்தத் தாயிடம் ஒப்படைத்தனர். அந்தத் தாய் தெய்வமே நேரில் வந்து உதவியதாகக் கூறி அவர்களை ஆசீர்வதிதத்தார். இதனையே மக்கள் சேவை மகேசன் சேவை என்கின்றனர்.

இவ்வாறான சல சம்பவங்கள் நாடடில் நடந்து கொண்டு கொண்டு இருக்கின்றன. ஆடம்பரம் இல்லாமல் செய்யப்படுவதனால் அவற்றுள் பல வெளிவருவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



ஆடம்பரமான வாழ்க்கை எப்போதும் ஆபத்தானவை என்பதனை உணர்ந்து கொள்வோம்.

வாழ்க்கைப் பயணம் தொடரும்..

# வேலையற்ற இளைஞர்களினூடாக உற்பத்திப்பொருட்களை ஊக்குவிக்கும் நிகழ்வுகள்








பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் அறிவொளி வளையம் மற்றும் வெளிநாட்டுத் திட்டப்பிரிவு இணைந்து கிராமத்தில் வேலையற்ற இளைஞர்களினூடாக உற்பத்திப்பொருட்களை ஊக்குவிக்கும் நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன

பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் அறிவொளி வளையம் மற்றும் வெளிநாட்டு திட்டப்பிரிவு ஆகியவற்றின் நிதியனுசரனையில்

நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகத்தின் செயற்படுத்தலின் கீழ் கிராமிய உற்பத்திகளை பொதியிடும் நிலையம் மற்றும் கிராமிய உற்பத்திகளுக்கான கண்காட்சியும் சம்மாந்துறை சிறி கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயத்தில் நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகத்தின் தலைவர் வினோஜ்குமார் தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வின் கௌரவ அதிதியாக பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் வெளிநாட்டுத் திட்டச் செயலாளர் புவனேஸ்வரி சபாரத்தினம் அவர்களும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் கங்கா சாகரிகா அவர்களும் நிஸ்கோ பணிப்பாளர் சிறிவர்த்தன அவர்களும் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி முபாரக் அலி அவர்களும் கிழக்கு மாகாண சொற்பொழிவாளர்கள் ஒன்றியத்தின் தலைவர் யுவஸ்ரீ கலா பாரதி சிவஸ்ரீ க.வி. பிரமீன் சர்மா அவர்களும் சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளர் ஜெயச்சந்திரன் அவர்களும் அகோரமாரியம்மன் ஆலயத்தின் செயலாளர் அழகுராஜன் அவர்களும் உபதலைவர் மோகன் அவர்களும் கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் இளங்கோபன் அவர்களும்

பிரதேச இளைஞர் சேவை அதிகாரி இஸ்மாயில் அவர்களும் மட்டக்களப்பு தரவை - 2 கிராம சேவகர் பரீட் அவர்களும் சமூர்த்தி உத்தியோகத்தர் ஹிதாயா அவர்களும் மற்றும் நியூ சன் ஸ்டார் இளைஞர்களும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்.

இதன் போது கிராமிய இளைஞர் உற்பத்திகளைப் பொதியிடும் நிலையம் திறந்து வைத்தனர். இதன் போது 23 இளைஞர்களினால் செய்யப்பட்ட சூழல் நேயமிக்க உற்பத்திப்பொருட்கள் மற்றும் உலர் உணவுப் பொருட்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டன. மேலும் எட்டு பல்கலைக்கழக மாணவர்களுக்கும் மாதாந்த புலமைப்பரிசில்களையும் வழங்கி வைத்தனர். இதன் போது பல நாடுகளில் சமூக மற்றும் சமய சேவைகளைச் செய்துவரும் பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் வெளிநாட்டுத் திட்டச் செயலாளர் புவனேஸ்வரி சபாரத்தினம் அவர்கள் கௌரவிக்கப்பட்டார்.

தற்போது ஐரோப்பா, அமெரிக்கா, கனடா மற்றும் ஆசிய நாடுகளில் பிளாஸ்டிக் பொருட்கள் கொஞ்சம் கொஞ்சமாக தடை செய்யப்பட்டு வருகின்றன. இதனால் சூழல் நேயமிக்க பயன்பாட்டுப் பொருட்களுக்கு அதிக சந்தை வாய்ப்புக்கள் உள்ளன. இப்பொருட்கள் உற்பத்தி செய்வதற்காக இளைஞர்களுக்கு பயிற்சிகளையும் உதவிகளையும் வழங்கி, சூழல் நேயமிக்க பயன்பாட்டுப் பொருட்களைக் கொள்வனவு செய்து வெளிநாடுகளுக்கு நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகம் ஏற்றுமதி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் கிராமத்துக்குத் தேவையான உலர் உணவுப் பொருட்களையும் உற்பத்தி செய்து வருகின்றன. இதற்கான நிதி உதவிகளை பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் அறிவொளி வளையம் மற்றும் வெளிநாட்டு திட்டப்பிரிவு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கைபேசி பாவிக்கும் குழந்தை மனநலம் குன்றி பெற்றோரை எதிரிகளாக கருதும் அவலம் உருவாகும்!

## கொடையாளர் கௌரவிப்பு விழாவில் கல்விப்பணிப்பாளர் உமர் மௌலானா உரை





**(வி.ரி.சகாதேவராஜா)**

கைப்பேசி பாவிக்கும் குழந்தைகள் மனநலம் குன்றி, பெற்றோரை எதிரிகளாக கருதும் அவலநிலை உருவாகும். எனவே குழந்தைகளுக்கு கைப்பேசியை வழங்காதீர்கள் என்று அன்னமலை ஸ்ரீ சக்தி வித்தியாலய

கொடையாளர் கௌரவிப்பு விழாவில் உரையாற்றிய சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா தெரிவித்தார்.

மேற்படி கொடையாளிகள் கௌரவிப்பு விழா பாடசாலை அதிபர் பொன் பாரதிதாசன் தலைமையில் நேற்று(26) சிறப்பாக நடைபெற்றது.

கௌரவ அதிதியாக சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா மற்றும் ஆசிரிய ஆலோசகர் பி.வி.குணரத்ன ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள் .

அங்கு அன்னமலை கொடையாளிகளால் செய்யப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் திறந்து வைக்கப்பட்டன.

கொடையாளி சித்திர சேனன் விஜிகரனின்( ஜேர்மனி) ஏற்பாட்டில் வரையப்பட்ட பாடசாலை மதில் சுவர்ஓவியங்கள் திறந்து வைக்கப்பட்டது.

அத்துடன் கொடையாளி அருள்ராஜா ஜெகதீசனின்( அவுஸ்திரேலியா) ஏற்பாட்டில் நிறுவப்பட்ட கொடிக்கம்பதளம் மற்றும் காலை ஆராதனை மேடை என்பன திறந்து வைக்கப்பட்டது.

மேலும் கொடையாளி கே.எம்.நிறோஜன்( கொழும்பு) பெற்றார் ஆசிரியர் ஒன்று கூடல் மண்டபத்திற்கான அடிக்கல் நடப்பட்டது.

அங்கு வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா மேலும் பேசுகையில்..

கைப்பேசிகளால் எமது நிம்மதி குறைகிறது. குறிப்பாக குழந்தைகள் மத்தியில் தொலைபேசி மற்றும் இணையம் ஆகியவற்றின் அதிக பயன்பாடு காரணமாக குழந்தைகளுக்கு ஞாபக மறதி ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளது. குழந்தைகள் வெகுவாக இணையக் காணொளியில் விளையாட்டுகளுக்கு அடிமையாகின்றனர்.

இணையக்காணொளி விளையாட்டு போட்டிகளில் குழந்தைகள் தீவிரமாக அவதானம் செலுத்துதால் மனநல நோய்க்கு உள்ளாகின்றனர். இதனால் பிள்ளைகள் கல்வியில் தோல்வியடைந்து பெற்றோரை எதிரிகளாக நோக்குகின்றனர்.

இதனால் குழந்தைகளின் எதிர்காலம் முற்றாக அழிந்துவிடும். எனவே குழந்தைகளுக்கு இயன்றவரை கையடக்க தொலைபேசியை வழங்குவதை பெற்றோர் தவிர்த்துக்கொள்ள வேண்டும் . என்றார்

சிறப்பதிதி வி.ரி.சகாதேவராஜா பேசுகையில் .

அன்னமலை ஸ்ரீ சக்தி வித்யாலயம் சமூகத்தை உள்வாங்கி இருக்கின்றது .அதனால் இத்துணை அபிவிருத்தி காண்கிறது. அதிபர் பாரதி பாராட்டுக்குரியவர். வாழ்த்துக்கள். என்றார்.

கொடையாளிகள் அனைவருக்கும் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

மேலும் பல கலைநிகழ்ச்சிகள் மேடையேறின.

# பாடசாலை சுற்றுமதில் சுவரோவியங்கள் திறந்து வைப்பு!




**( வி.ரி.சகாதேவராஜா)**

சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட அன்னமலை ஸ்ரீ சக்தி வித்தியாலய சுற்றுமதிலில் வரையப்பட்ட அழகான சுவரோவியங்கள் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் பொன் பாரதிதாசன் தலைமையில் நடைபெற்ற இத்திறப்புவிழாவில் பிரதம அதிதியான சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா கலந்து கொண்டு நாடா வெட்டி திறந்து வைத்தார்.

கௌரவ அதிதிகளாக சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா மற்றும் ஆசிரிய ஆலோசகர் பி.வி.குணரத்ன ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள் . ஜேர்மனியில் வாழும் அன்னமலையைச் சேர்ந்த கொடையாளி சித்திரசேனன் விஜிகரனின் ஏற்பாட்டில் வரையப்பட்ட இச் சுவர்ஓவியங்கள் மூன்றரை லட்சம் ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்டது.

ஜேர்மனியிலிருந்து வந்த கொடையாளி விஜிகரன் தம்பதியினர் இவ் விழாவில் கலந்து கொண்டனர்.

அவர்களுக்கு பாடசாலை சமூகம் சார்பில் வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

# 35 வருடங்களாக பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவுதோகையை வழங்கி வரும் ராமகிருஷ்ண மின்!

**(வி.ரி.சகாதேவராஜா)**

கடந்த 35 வருடங்களாக பல்கலைக்கழகம் புகும் மாணவர்களுக்கு ராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு கிளை மாதந்தோறும் உயர் கல்விக்கான உதவித் தொகைகளை வழங்கி வருகிறது.

அந்த வகையில் இந்த வருடத்தில் புதிதாக பல்கலைக்கழகத்திற்கு அனுமதி கிடைக்க பெற்று பல்கலைக்கழகத்தில் இணைந்து கொண்ட மாணவர்களுக்கான உதவித்தொகைகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம்(26) கல்லடி சிறுவர் ஆச்சிரமத்தில் நடைபெற்றது.

ராமகிருஷ்ண மிஷன் இலங்கைக்கான தலைவர் ஸ்ரீமத் சுவாமி அகஷராத்மானந்தஜீ மஹராஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இவ் உதவு தொகை வழங்கி வைக்கப்பட்டது. நிகழ்வில்



இராமகிருஷ்ண மிஷன் கல்லடி சிறுவர் ஆச்சிரமத்தின் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் உதவி பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுரர்ச்சிதானந்தா ஜீ மகராஜ் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

ஒவ்வொரு மாதத்திற்கான கொடுப்பனவுகளும் மூன்று மாதத்திற்கு ஒரு முறை அவர்களுடைய வங்கி கணக்குகளில் வைப்பிலிடப்படுகின்றன.

குறிப்பிட்ட மாணவர்கள் சிறந்த முறையில் அவர்களுடைய மேற்படிப்பை பூர்த்தி செய்யும் வரையிலும் அவர்களுக்கான உதவித்தொகைகள் மாதம் தோறும் வழங்கப்படுகின்றன அத்தோடு சிறந்த முறையில் பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளும் மாணவர்களுக்கு பட்ட மேற்படிப்பிற்கான உதவிகளும் வழங்கப்படுகின்றன.

# பல்துறை சார்ந்த பெண்களுக்கு கௌரவம்!

**(அபு அலா)**

திருகோணமலை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பல்துறை சார்ந்த 160 பெண்களை பாராட்டி கௌரவிக்கும் விழா ஹலோ TV ஹலோ FM நிறுவனத்தின் ஏற்பாட்டில் (23) திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி எப்.எம்.சரிக் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.திசாநாயக்கா பிரதம அத்தியாக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

சமூகசேவை, கல்வி, மருத்துவம், விளையாட்டு, சுற்றுலாத்துறை, அழகியல்துறை, கலை, கலாசாரம், அரச மற்றும் அரச சார்பற்ற தொழிற்துறை சார்ந்த பல்வேறுபட்ட பெண்கள் இவ்விழாவின்போது பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.







# சமூக ஒருமைப்பாட்டுக்கு மொழி மிக அவசியம்

இயற்கையின் மடியில் இமயமாய் உயர்ந்து அயல் நாட்டவர்கள் ஆக்கிரமிக்க துடிக்கும் பல்வேறுபட்ட சிறப்பம்சங்களை கொண்டு மிளிரும் நம் நாட்டின் இன்னுமோர் பொக்கிஷமாய் துலங்குவது பல்லின சமூகக் கட்டமைப்பைக் கொண்ட சமுதாய அமைப்பு. இதன் அடிப்படையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ,கிறிஸ்தவர் என தத்தம் சமய கலாச்சார அடிப்படையில் வேறுபட்டாலும் தமிழ் ,சிங்களம் ஆகிய மொழிகளே இங்கு பிரதானமாக பேசப்பட்டு வருவது சமத்துவப் படுத்தப்பட்ட சமூகக் கட்டமைப்பின் வெளிப்பாடே எனின் மிகையாகாது. அந்த வகையில் மனிதனையும் விலங்குகளையும் வேறுபடுத்திக் காட்டும் மிகச்சிறந்த நாகரீகத்தின் அடிகோலாகஅமைவது மொழி. சமூகங்களுக்கு இடையில் நல்லிணக்கம் ,மனிதநேயம் ஒருமைப்பாடு ,இனங்களுக்கு இடையிலான ஒற்றுமை போன்றவற்றை வளர்த்தெடுக்கின்ற மிகச்சிறந்த தொடர்பாடல் ஊடகமாக மொழி திகழ்வதே அதன் சிறப்பம்சம்.

அந்த அடிப்படையில் எமது நாட்டில் தமிழ், சிங்களம் ,ஆங்கிலம் போன்ற மொழிகள் நடைமுறையில் இருந்து வந்தாலும் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளுமே அரசகருமமொழியாக ஏற்கப்பட்டுள்ளது. இது இந்நாட்டில் வாழும் இரண்டு மொழி பேசும் மக்களையும் கௌரவித்து அங்கீகாரம் வழங்கும் செயற்பாட்டின் அடையாளம் எனலாம் . இன்று அரச திணைக்களங்களில் பணிபுரியும் ஊழியர்கள் தொடக்கம் உயர் அதிகாரிகள் வரை யாவருமே தம் தாய் மொழிக்கு அடித்தபடியாய் இரண்டாம் மொழியினை கற்றல் என்பது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளமை பாராட்டிற்குரிய விடயமாகும். அரசின் இக் கொள்கையின் ஊடாக இந்நாட்டில் வாழும் சகல பிரஜைகளினதும் தேவைகள் மற்றும் அபிலாசைகள் போன்றன சரியான முறையில் நிறைவேற்றப்படும் என்பதில் ஐயமில்லை ."இலங்கையில் எப் பிரதேசத்திலும் சென்று சேவை செய்ய தயார் " என்ற வாக்குறுதியின் அடிப்படையில் பணிகளைப் பொறுப்பேற்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் தம் கடமையை சரிவர நிறைவேற்றுவதற்கான சிறந்த ஆயுதமாகவே இந்த இரண்டாம் மொழி கற்கை என்பது அமைகின்றது .

எமது நாட்டில் திட்டங்கள் வகுக்கப்படுவதும் காலப்போக்கில் அவை காணாமல் போய் கை நழுவ விடப்படுவதும் சாதாரனமான போதும், தற்போது இரண்டாம் மொழிக்கென வரையப்பட்ட மொழி உள்ளடக்கமும் பாடத்திட்ட நடைமுறைகளும் நாடு பூராகவும் சிறப்பாய் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படுவதுடன் அவை வெற்றி நடை பயில்வதனையும் காண முடிகின்றது . அதற்கு காரணம் தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் இப்பாட நெறிக்கென தனித்துவமான பாடத்திட்டம் ஒன்றை வகுத்துள்ளதோடு அது எமது அன்றாட வாழ்வியலுடன் இணைத்து செயல்படுத்தும் விதமாகவும், அனைத்து விடய தானங்களும் அமையப்பெற்றுள்ளதாகும். "ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது" என்பது போல நாம் பல்வேறு விடயங்களைப் பயின்று, எழுதி புத்தகப் பூச்சிகளாய் பெறுபேறுகளைப்பெற்று சித்தி பெறுவதில் என்ன பயன்? எமது வாழ்வியல் நடவடிக்கைகளோடு அவை கைகோர்த்து பயணிக்கையில் அதன் தரம் மேலும் அட்டை தீட்டப்பட்டு ஜொலிக்க ஆரம்பிக்கும். அவ்வாறே கற்கை நெறியின் ஊடாக பேச்சு மொழிப் பயிற்சி வழங்கப்படுவதும் கற்கை முடிவு வரை அம்மொழியிலேயே பேச வேண்டும் என்ற நியதிகள் எமது மொழித் திறனை மேலும் அதிகரிக்கும் என்பது வெள்ளிடைமலை. அத்தோடு இரு மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற சிறந்த வளவாளர்களும் தேசிய ரீதியாக தெரிவு செய்யப்பட்டு இப்பாட நெறியில் பங்கேற்பது மேலும் இத் திட்டத்தை வலுப்பெற செய்கின்றது. அந்த வகையில் இரண்டாம் மொழியாக சிங்கள மொழியினைக் கற்றுக் கொண்டிருக்கும் எனக்கு இக்கற்கை நெறியைத்தொடர்வதற்கு வாய்ப்பளித்து இன்று எனது இக் கட்டுரையாக்க முயற்சிக்கு முதுகெலும்பாய் நிற்பது எழுத்தாணி கலைப் பேரவையே.

நாடளாவிய ரீதியில் இரண்டாம் மொழிக் கற்கை நெறியானது பல்வேறு விதமாகவும் நடாத்தப்பட்டு வரும் சந்தர்ப்பத்தில்தான் தேடும் தேடுபொருளின் திறவுகோலாய்க் கிடைத்த ஊடகவியலாளர்களை மையமாகக் கொண்டு ஊடகவியலாளர்களுக்கான இரண்டாம் மொழி கற்பித்தல் எனும் துடுப்பின் மூலம் தம் நிறுவனத்தின் எடுகோலாய் அமைந்த சமாதானத்தையும் இன நல்லிணக்கத்தையும் கட்டி எழுப்புதல் எனும் இலக்கை அடைவதற்கென சிறந்த திட்டமிடல் ஒன்றின் மூலம் அதன் வெற்றியின் உச்சத்தில் எழுத்தாணி கலைப் பேரவை நிற்கின்றது எனின் மறுப்பதற்கில்லை. வெளியே நின்று எட்டிப் பார்ப்போருக்கு எழுத்தாணியின் செயல்பாடு சாதாரண ஒரு விடயமாக தோன்றினும் அதில் உள் நுழைந்தவர்க்கே அவர்களது திட்டமிடலும் அதனை செம்மையாக நடைமுறைப்படுத்தும் நுட்பமும் இதனிடையே பெறப்படுகின்ற அடைவுகளின் உயர்ந்த மட்டமும் புரியும். சமாதானம் நல்லிணக்கம் போன்றவற்றை கட்டி எழுப்பும் நோக்கத்தோடு நாடளாவிய ரீதியில் எத்தனையோ நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்ற போதிலும் அவர்களால் நீண்ட கால செயற்பாடுகளின் மூலம் எட்ட முடியாத வெற்றியினை குறுகிய ஆறு மாதங்கள் என்ற கால இடைவெளியில் எமது எழுத்தாணிப் பேரவை அடைந்துள்ளது. அதற்குக் காரணம் சிறந்த திட்டமிடல் நடைமுறை ஒன்றின் மூலம் அதன் தலைமையோடு இணைந்த பணிக் குழாத்தினர் மிகச் சிறப்பாக செயல்பட்டமையே. மிகச் சுலபமாக என்பதை விட நூறு சதவீதம் வெற்றிகரமாக அமைய காரணமாக அமைந்தது என்பதுடன் அவர்களின் திட்டமிடல்களையும் இவ்விடத்தில் படம் போட்டுக் காட்டப்பட வேண்டிய தேவை உள்ளது.

ஏனைய கற்கை நெறிகளில் சிங்களம் கற்கும் தமிழ் மொழி மூல மாணவர்கள் அல்லது தமிழ் மொழி கற்கும் சிங்கள மொழி மூல மாணவர்கள் மாத்திரமே கற்கையாளர்களாக இணைக்கப்படுவர் .ஆனால் எமது நெறியில் சிங்கள மொழி பேசும் மாணவர்களும் தமிழ் மொழி பேசும் மாணவர்களும் இணைக்கப்பட்டிருந்தமை இதன் வெற்றி படியின் முதல் இரகசியம். ஆரம்பத்தில் ஒரு சில வகுப்புகள் தனித்தனியாக நடாத்தப்பட்ட போதிலும் எமக்கு அடிப்படை மொழியறிவு ஏற்படுத்தப்பட்ட காலப் பகுதியின் பின்னர் இரு மொழி மாணவர்களையும் இணைத்து இடையிடையே வகுப்புகள் நடத்தப்பட்டமை நாம் வகுப்பில் கற்ற விடயங்களை அனுபவ ரீதியாக பயன்படுத்த சிறந்து வாய்ப்பாக அமைந்தது. ஏனெனில் எம்மில் அதிகமானோர் அனேகமாக தமிழ் மொழி வசப்பட்ட சேவை செய்யும் அலுவலகங்களில் சேவையினை முன்னெடுத்துச் செல்பவர்களாகவும் இருக்கின்றோம். ஆரம்ப வகுப்பில் சிறு புன்னகையுடன் நட்பினை மேற்கொண்ட நாம் பின்னர் எம் சகோதரமொழி பேசும் நண்பர்களோடு சிறுகச் சிறுக பேசி கதைக்க ஆரம்பித்தோம். அப்போது எமக்குள் எம்மால் சிங்களம் பேசுவது கஷ்டமான காரியம் அல்ல என்ற தன்னம்பிக்கை பிறக்க ஆரம்பித்தது. அவர்கள் எம்முடன் தமிழ் மொழியில் பேசினர். பிழைகள் ஏற்படும் போது அவற்றை சரிப்படுத்திக் கொண்டோம். சிங்களம் பேசுவதில் இதுவரை இருந்த பயமும் வெட்கமும் எங்கு சென்றதோ இது வரை யாமறியோம்.

அங்கு செல்லும்போது மனதில் ஏதோ பயமும் சஞ்சலமும் பின் பின்தொடர்ந்தது. ஒரு நாள் முழுவதும் குறைந்தது ஆறு மணித்தியாலங்கள் அவர்களுடன் இருப்பதை நினைக்கையில் நெஞ்சின் நடுவில் பெரும் பாரங்கல்லை வைத்து விட்டது போல பெரும் மன அழுத்தம். அவரது வீட்டிற்குச் செல்லும் முன் தொலைபேசியில் உரையாடினோம். எனக்குத் தெரிந்த சிங்களமும் அவருக்குத் தெரிந்த தமிழும் முகவரியை அறிய உதவியது. வீட்டு வாசலை அடைந்ததும் ஒரு குடும்பமே என் வருகைக்காக காத்திருந்தது. என்னை அவர்களது கலாச்சார முறைப்படி கைகூப்பி வணக்கம் தெரிவித்து வரவேற்று வீட்டுக்குள் அழைத்துச் சென்றனர் அவ்விடத்திலேயே என்னுள் குடி கொண்டிருந்த தேவையற்ற கற்பனா சக்தியுடனான பயமும் உள்ளத்தின் பாரமும் உதிர்ந்து விழுந்தன.

இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் மொழிக்கு மிகப்பெரிய பலம் உண்டு என்பதை உணர முடிந்தது. இந் நிகழ்வின் மூலம் நாங்கள் எமது கருத்துக்களை பரிமாறவும் உணர்வுகளை மற்றவர்கள் புரியும் படி வெளிப்படுத்தவும் இரண்டாம் மொழியில் எமக்கு பாலமானது. இலங்கையில் செயல்படும் பல்வேறு நிறுவனங்களும் தமது நோக்கத்திற்கு அப்பால் இவ்வாறான சமுதாய நலன் மிக்க நிகழ்வுகளை மேற்கொள்ளும் இடத்து இனங்களிடையே புரிந்துணர்வு அதிகரித்து ஐயம் தெளிந்து இன்பமிக்க நன்நாடு ஒன்றை உருவாக்கலாம் என்பதில் ஐயமில்லை.அவர்களது கலாச்சார நடைமுறைகள் யாவும் மிகுந்த மனிதாபிமானத்துடன் இணைந்திருந்தது. ஓரிரு மணித்தியாலங்களில் நானும் அவர்களது குடும்பத்தில் ஒருத்தியாய் இருப்பது போல் உணர வைத்தது. அவர்களது நடைமுறை பண்பாடு என்பது ஒரு தனி மனிதன் தம் குடும்பத்தாருடனும் உலகத்தோடும் நற்பண்புகளுடன் பொருந்தி வாழ்வது என பல்கலைக்கழகத்தில் கற்றதை எனக்குள் ஞாபகப்படுத்துவதாய் உணர்ந்தேன். அவர்கள் சில மரபு வழி நடைமுறைகளை பின்பற்றுகின்றனர். விருந்தினராய் வந்த எமக்கு நீர் குவளைகளை தொடும்படி கூறினர். எனக்கு இது புதிது. காரணம் வினவினேன். உபசாரங்கள் எதனையும் ஆரம்பிக்கும் முன் தமது மரபு வழி நடைமுறை எனக் கூறி எனக்கு பல்வேறு உணவுகளையும் அவர்களது கலாசாரத்தை காண்பிக்கும் விதத்தில் ஏற்பாடு செய்திருந்தனர். அவர்கள் தம் குடும்பத்தாருடன் மிகவும் அன்னியோன்யமாக பெறுகின்றனர். வீட்டு வேலைகள் முதல் சிறு தோட்ட வேலைகள் வரை குடும்பத்தில் சகல உறுப்பினர்களதும் பங்கு பற்றுதல் இருப்பதை காண முடிந்ததுடன் அவர்கள் தமது உணவுக்கானவற்றுள் பெரும்பாலானவற்றை தம் வீட்டுத் தோட்டங்களிலேயே உற்பத்தி செய்கின்றனர். அதுவும் எனக்கு மிகவும் பிடித்தமான விடயமானது. அத்தோடு அவர்களி டம் இன்னும் விறகடுப்புகளில் சமைக்கும் பண்பாடும் மண்சட்டி பானைகளை பயன்படுத்தும் நடைமுறையும் காணப்படுகின்றது. இவை அவர்களது ஆரோக்கியத்திற்கும் மகிழ்ச்சிகரமான வாழ்விற்குமான ரகசிய நடைமுறையாக இருக்கலாம் என மனதால் எண்ணினேன்.

ஆரம்பத்தில் எழுத்தாணி கலை பேரவையின் மூலம் நடத்தப்படும் இக்கற்கை நெறியின் இறுதியில் தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிர்வகத்தின் மூலம் வழங்கப்படும் சான்றிதழ் ஒன்றை மட்டுமே பெற்றுக் கொள்ளும் நோக்கத்தோடு வருகை தந்த என் போன்ற பலரும் அடுத்த வகுப்பிற்கான நாளை எதிர்பார்த்து வகுப்பிற்கு வர ஆரம்பித்தோம். ஆரம்பத்தில் சிங்களம் என்பதில் சிக்கல்பட்டு எமது தொழில் புரியும் இடங்களில் மாத்திரமன்றி கடைகள், வீதிகள் ,போக்குவரத்து போன்ற எல்லா இடங்களிலும் சிக்கித் தவித்த நாம் இப்போது அவர்களோடு சிங்களத்தில் பேச வேண்டும் என்ற ஆவலுடனே புறப்படுகின்றோம். எமது தேவைகளை நிறைவேற்றும் இடங்களில் சிங்கள சகோதரர்கள் வாழும் இடத்து அவர்களுடன் சிங்களத்தில் பேசவே முயற்சிக்கின்றோம். என்னை அறிந்த பலரும் எம்மை பாராட்டும் போது எழுத்தாணிக்கு மனதுக்குள் நன்றி சொல்ல தவறுவதில்லை. பேருந்தில் பயணிக்கும் போது தமிழ் பாடல்களை விட சிங்கள பாடல்களை ரசிக்கவும் அதில் வரும் சொற்பதங்களை மொழிபெயர்க்கவும் தாமாகவே மனது உந்துகின்றது. ஏதோ சிறிதாய் பொருள் விளங்குகின்றது. இதன் போதே மொழியானது இரசனை உணர்வைத் தூண்டும் சிறந்த ஓமோன் போன்றதாய் உணர்கின்றேன்.

ஆரோக்கியம் என்னும் போது தான் இன்னும் ஒரு விடயம் ஞாபகத்திற்கு வருகின்றது. அவர்கள் தமது வீட்டு தோட்டத்தில் ஒரு பகுதியில் சிறு மூலிகை தோட்டம் ஒன்றையும் வைத்திருக்கின்றனர். சிறிய உபாதைகள் நோய்கள் ஏற்படும் இடத்து அவர்களது மூதாதையர்களை பின்பற்றி வைத்தியம் செய்யக்கூடிய சிறந்த அறிவும் அவர்களிடையே காணப்படுவது எனக்கு ஆச்சரியத்தை தந்தது. இது பற்றி அங்கிருந்த வயது சென்ற ஒருவர் என்னோடு பேசிய போது சில மூலிகை செடிகளை காட்டி சிங்களத்தில் ஏதோ கூறினார். அவை அரைகுறையாக

மிகுதி 08 ஆம் பக்கம் பார்க்க...



# சமூக ஒருமைப்பாட்டுக்கு மொழி மிக அவசியம்

எனக்குப் புரிந்தாலும் எமது வாழ்வியல் நடைமுறையுடன் ஒப்பிடும்போது மிகவும் வித்தியாசமான ஒரு போக்கை உணர முடிந்தது. அது மாத்திரமன்றி நம் புத்தகங்களில் படங்களை பார்த்து எம் சந்ததியினருக்கு கற்பிக்கும் உரல், உலக்கை, அம்மி, சுளகு போன்றவற்றையும் அங்கு என்னால் காண முடிந்தது. மொத்தத்தில் அவர்கள் நாகரீக வளர்ச்சியுடன் கைகோர்த்து தம் வாழ்வியலை நடத்திச் சென்றாலும் தம் மூதாதையரின் கலாசாரம் மரபுகள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றை புறந்தள்ளி விட வில்லை என்பதுபோற்றக்கூடியதே.

மொழி ,கலாசார நடைமுறைகள் ,மரபு வழி செயல்பாடுகள் போன்றவற்றால் மாத்திரம் அவர்கள் எம்மில் இருந்து வேறுபடுகின்றனரே தவிர மானிடம் தொலைத்த முரடர்களாய் அவர்கள் இல்லை. அன்றைய நாளில் நான் அவர்களுடன் இணைந்து அவர்களது வழிபாட்டுத் தளங்களுக்குள் பிரவேசித்தேன். அங்குள்ள நடைமுறைகள், கட்டட நிர்மாணங்கள் பற்றிய ஒரு தெளிவு பிறக்கும் இடத்தே "ஒரே கடவுள் "தான் இந்த உலகில் மக்கள் மனங்களில் வெவ்வேறு வடிவங்களில் வாழ்கின்றார் என்பதை உணர நீண்ட நேரம் செல்லவில்லை. இவ்வாறு நான் இங்கு சொல்லிய அனுபவங்களை போலவே பல மறக்க முடியாத இனிமையான அனுபவங்களை பெற்று தந்த அந்த நாள் என்னுடைய வாழ்வியல் புத்தகத்தில் மறக்க முடியாத அட்டைப் படமாகியது. விடைபெற மனமின்றி விடை பெற்ற அந்த நாள் என்றும் எனது வாழ்வில் மறக்க முடியாத தடமானது.

அதன் பின்னர் அடுத்த வகுப்புகளில் என்னை போலவே என் நண்பர் பலரும் ஒருவரை ஒருவர் முந்தி தத்தம் சோசியல் கேதரிங் அனுபவங்களை அடுக்கி கொட்டிக் கொண்ட போது எழுத்தாணி எட்டிப் பிடிக்க முயற்சித்த எல்லையை எளிதாய் அடைந்து கொண்டதை எண்ணி மனதால் மகிழ்ச்சி அடைந்தேன். அதன் பின்வந்த இணைக்கப்பட்ட ஒவ்வொரு வகுப்புகளிலும் இதன் பெறு பேறு சிறப்பாய் வெளிவரத் தொடங்கியது .உண்ணும் உணவுகள் முதல் உள்ளத்து உணர்வுகள் வரை ஒருவரோடு ஒருவர் பரிமாற ஆரம்பித்தோம்.

ஆரம்பத்தில் அன்பு,அறம், பண்பாடு போதித்த மனித அறிவாற்றல் இன்று அவனியிடையேயும் தாண்டி ஆகாயத்தை அலசி ஆராய்ந்து கொண்டிருக்கின்ற இக்காலகட்டத்தில் மனிதம் என்பதை மறந்து மானிடப் பிறப்பின் அர்த்தத்தைத் தொலைத்து விட்டு நட்டாற்றில் நிற்கும் சமூகத்தினருக்கு எழுத்தாணியின் மூலம் எமக்காய் முன்னெடுக்கப்படும் இவ்வாறான செயல் திட்டங்கள் காலத்தின் தேவையே.

இக்கற்கை நெறியின் இன்னுமொரு இலக்கை நோக்கிய பயணத்தைப் பற்றியும் இவ்விடத்தில் குறிப்பிட்டேயாக வேண்டும். அதுவே நமக்கான "எக்ஸ்போசல் விசிட்" இதுக்காக இலங்கையின் கரையோரத்தில் இருந்த நாம் மத்திய மலை நாட்டை நோக்கி பயணமானோம். இது வெறும் எக்ஸ்போசல் விசிட்டாக இருக்கவில்லை. அங்கு செல்லும் முன்னமே எமக்கு அறிவிக்கப்பட்டது போல ஊடகத்துறையில் நீண்ட கால அனுபவங்களைப் பெற்று சேவையாற்றிக் கொண்டிருக்கும் ஊடகவியலாளர்கள் பலரையும் சந்திக்கும் வாய்ப்பு எமக்குக் கிடைக்கப்பெறும் என்பதே. அதற்காக எழுத்தாணி நிறுவனம் பயண ஒழுங்குகள் முதல் அனைத்தையும் சீராக மேற்கொண்டிருந்தது .அவர்களை சந்திக்க வேண்டும் என்று ஆவல் உள்ளத்தில் குடிகொள்ள நாமும் எம் சகோதர இனச் சகோதரர்களும் எழுத்தாணி குடும்பமும் அதிகாலையில் புறப்பட்டோம். தமிழ், சிங்களப் பாடல்கள் காதுகளைத் துளைத்துக் கொண்டு செல்ல பரதமும் மேலைநாட்டு நடனமும் பேருந்தை ரணகளமாக்க கண்டியைஅடைந்தோம். பேருந்து பயண ஓட்டத்தில் உணவுகளையும் சில உணர்வுகளையும் பரிமாறிக் கொள்ள மீண்டும் எமக்கு வாய்ப்புக்கு கிடைத்தது. இவை அனைத்திற்கும் நாம் கற்றுக் கொண்ட இரண்டாம் மொழியே காரணமாகியது என்றால் மறுப்பதற்கில்லை. நண்பகல் வேலைக்கு சற்று முன்பதாகவே நாம் செல்ல வேண்டிய இடத்தை அடைந்த போது அங்கும் எமக்கான அடைந்தபோது அங்கும் எனக்கான வரவேற்பும் உபசாரங்களும் எவ்வித குறைபாடுகளும் இன்றி சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஊடகத்துறையில் சேவையாற்றுதல் என்பது கடவுளால் வழங்கப்பட்ட வரம். ஏனைய துறைகளினை போற்றும் எமது சமூகமும் அரசும் சமுதாயத்தின் ஆரோக்கியத்திற்கு அடிக்கல்லாய் அமைகின்ற ஊடகத்துறையைப் பற்றி எப்போதும் சிந்திப்பது குறைவு . "ஊடகம் சமூகத்தின் கண்ணாடி "எனின் அதனை மறுப்பதற்கு இல்லை. ஏனெனில் எந்த ஒரு இடத்திலும் நடந்த, நடக்கின்ற, நடக்க இருக்கின்ற சம்பவங்களினதும் நிகழ்வினதும் உண்மை நிலையினை உரிய இடத்திற்குச் சென்று அலசி ஆராய்ந்து தெளிவான தகவல்களை மக்கள் மத்தியில் கொண்டு சேர்க்கும் உன்னத சேவை இது.

ஒரு நாட்டு மக்கள் ஒற்றுமை காத்து இன ஐக்கியத்துடன் சகவாழ்வு வாழவும் ,மாறாக கடந்த காலங்களில் இடம் பெற்றதைப் போல பிளவுபட்டு, இரத்தம் சிந்தி, உயிர் பலி தீர்த்து நாட்டை சுடுகாடாக மாற்றி கரைபடிந்த அனுபவங்களை பெற்றுத் தந்த நிகழ்வுகளின் நிழல்களில் ஊடகத்துறையின் பங்களிப்பும் இன்றியமையாததே. மக்களுக்கும் அரசுக்கும் இடையே சிறந்த பாலமாக இருந்து இவ் ஊடகங்கள் செயல்படுகின்றன. இவ் ஊடகத்துறையின் கீழ் மக்களது உரிமைகள்,சமத்துவம்,சகவாழ்வு, பாதுகாப்பு போன்றன உறுதிப்படுத்தப்படுகின்றது.

ஊடகத்துறையில் 25 தொடக்கம் 30 வருட கால அனுபவங்களை பெற்று இன்றும் இளமை மாறாது துடிப்புடன் இயங்கும் அவர்களைப் பார்த்த உடனேயே எனது மனதுக்குள் ஏதோ எத்தனையோ மாறுதல்களையும் உற்சாகத்தையும் உணர முடிந்தது. கிட்டத்தட்ட என்னுடைய வயது அவர்களில் பலரது சேவைக்காலம். கேட்கும்போதே உடல் முழுவதும் புல்லரித்தது போன்றிருந்தது. எம்முடைய எழுத்தாணி பேரவையின் தலைவர் அவர்கள் தன்னையும் எழுத்தாணி எட்டி வைத்த கால் தடங்களையும் அதன் இலக்கையும் தற்போது அதன் செயற்பாடுகளையும் அனைவருக்கும் எடுத்தியம்பியதுடன் நிகழ்வில் எமக்கும் அங்கு வருகை தந்திருந்த சிரேஷ்ட ஊடகவியலாளர்களுக்கும் இடையே சிறந்தொரு கருத்துப்பரிமாற்றத்திற்கான வாய்ப்பை ஏற்படுத்தி தந்தார்.

அவர்கள் அனைவரும் மலையகத்தை சேர்ந்தவர்கள். சிலர் சிங்கள மொழியினையும் சிலர் தமிழ் மொழியையும் தமது தாய் மொழியாக கொண்டவர்கள். அவர்கள் தாம் ஊடகத் துறையில் சேவையாற்றும்போது இரண்டாம் மொழியின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர்கள். அனுபவ ரீதியாக அதன் அவசியத்தின் ஆழத்தை அறிந்தவர்கள். தாம் இரண்டாம் மொழியில் தேர்ச்சி பெறாத காலகட்டத்தில் அடைய முடியாமல் போன இலக்குகளையும் அனுபவங்களையும் எம்முடன் பகிர்ந்து கொண்டனர். தம் ஆர்வமும் தேவையும் தேடலும் இரண்டாம் மொழியில் இலகுவாக கற்றுக் கொள்ள துணையாக இருந்ததாக பலர் கூறினர். அத்துடன் இரண்டாம் மொழி அறியாமையினால் தாம் வெட்கி தலை தாழ்த்திய சந்தர்ப்பங்களும்,அவமானங்களும் இன்று வரை அவர்களுக்கு இரண்டாம் மொழி மீதான ஆர்வத்தையும் அவசியத்தையும் மேலும் வலுப்படுத்துவதாக கூறினர். அவர்கள் இவ்வாறான உயர் பதவிகளில் உன்னத நிலையில் இருந்து உண்மைகளை சமூகத்திற்கு உரத்த குரலில் உயிர் துடிப்புடன் வழங்க இரண்டாம் மொழியே பிரதான காரணம் என்பது அவர்களது ஒட்டுமொத்த கூற்று. ஏனெனில் எமது நாட்டைப் பொறுத்தவரையில் குறைந்தது இரு மொழிகள் பற்றிய அறிவின்றி இவூடகத் துறைக்குள் நிலைத்திருப்பது என்பது பகற்கனவு. இவர்கள் கூறிய இரண்டாம் மொழியின் அவசியத்தை உணர்த்தும் வகையில் எம்முடன் பகிர்ந்து கொண்ட ஒவ்வொரு அனுபவ முத்துக்களும் எமது இலக்கினை இலகுவாய் எட்டிக் கொள்ள ஒளிமயமான ஒரு பாதையை எமக்கு வகுத்து தந்தது.

உன்னத சேவை வழங்கும் ஊடகத்துறையின் உறுப்பாக அமைந்த ஒவ்வொரு ஊடகவியலாளனும் தம் சேவையின் தரம் உணர்ந்து உண்மை தன்மையைப்பிரதிபலிக்கும் வகையில் செயல்பட முயற்சிக்கும்போது முட்டு கட்டையாய் அமைவது இரண்டாம் மொழி. ஒரு ஊடகவியலாளர் நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்ற தயார் நிலையில் இருக்க வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரையில் இங்கு சிங்களம் பேசும் மக்களும் தமிழ் மொழி பேசும் மக்களும் சகல இடங்களிலும் ஒன்றித்து வாழும் சூழலில் அங்கு சென்று செய்தி சேகரித்து உண்மை நிலையினை அறிய இரண்டாம் மொழியானது இன்றியமையாதது. அப்போதுதான் ஊடகத்துறையின் தனித்துவம் காத்து சரியான தகவல்களை மக்களிடையே கொண்டு சேர்க்க முடியும். இன்னொருவரை நாம் உதவிக்கு நாடுகின்ற போது அவர்கள் மொழிபெயர்க்கின்ற போது அவை திரிவுபட இடமுண்டு. கடந்த காலங்களில் ஊடகம் துறையில் இவ்வாறான பல சம்பவங்கள் இடம் பெற்றதை இங்கு வருகை தந்த ஊடகவியலாளர்களின் அனுபவப் பகிர்வின்போதும் அறிய முடிந்தது. எமது நாட்டில் யுத்தம் நடை பெற்ற காலப் பகுதியில் இடம்பெற்ற ஒரே சம்பவம் செய்தியாக்கப்பட்டு சிங்கள மொழி பத்திரிகையில் ஒருவிதமாகவும் தமிழ் மொழி பத்திரிகைகளில் வேறொரு பரிமாணத்திலும் வெளியானது. அப்போது ஊடகங்கள் தமக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி தமது எண்ணப் போக்கிற்கு ஏற்ப செய்திகளை வெளியிட்டன. அவை மக்கள் மத்தியில் பேசுபொருளாய் மாறி யுத்தமானது இத்தனை தீவிரமடைய மறைமுகமாக ஊடகங்களின் செயற்பாடுகளும் காரணமாகின.

அவ்விடத்தில் பெண்ணாய் பிறப்படுத்து எத்தனை சவால்களை முறியடித்து பிரதான ஊடகங்களில் உயர் பதவிகளை தம் வசம் கொண்ட இருவரும் வருகை தந்திருந்தனர்.

ஊடகத்துறையைப் பொறுத்தவரையில் ஏனைய தொழிற்துறைகளை போல் அன்றே சமூகத்தில் பல்வேறுபட்ட தரப்பினருடனும் ஒன்றித்தும் முரண்பட்டும் எதிர்ப்புக்கள் பலவற்றையும் சந்தித்து சாதிக்க வந்தவைகளை சாகடித்து விடும் அனுபவங்களை பெற்றுத்தரும் ஒரு துறை .அதுவும் பெண்களை பொறுத்தவரையில் தம் குடும்பமும் குடும்பம் முதல் சமூகம் வரை எவருமே பெண் ஊடகவியலாளர்களை ஊக்கப்படுத்துவதுமில்லை உதவி செய்வதும் இல்லை. அதையும் தாண்டிச் சென்று சிறப்பானது. ஒரு படித்தரத்தில் காலடி எடுத்து வைத்த பிற்பாடு வரும் சோதனைகளை சாதனைகளாய் மாற்றும் முயற்சிக்கு எத்தனை குடும்பங்கள் பெண்ணென்று கைகோர்க்கும் என்றால் அது கேள்விக்குறியே. இவை அனைத்திற்கும் மேலாக அரசியல் முதல் அடிமட்ட மானிடர் வரை அனைவரும் பதிலளிக்க வேண்டும். அவ்வாறான சூழலில் நாம் சந்தித்த இரண்டு பெண் ஊடகவியலாளர்களும் என் மனதில் இடம் பிடித்துக் கொண்டனர். அவர்கள் இருவரும் ஆரம்பத்தில் தாய் மொழியை மட்டும் தம்மகத்தை கொண்டு செயல்பட்ட காலங்களில் தமக்கு ஏற்பட்ட சிரமங்களையும் இந்த அனுபவங்களையும் கூறும் போது எனக்கு அவ்வாறான சிக்கல்கள் ஏற்படாது இன்று இரண்டாம் மொழியில் ஓரளவேனும் உள்ள அறிவை எண்ணி மனதால் பெருமைப்பட முடிந்தது. இன்னும் நானும் இவ்வூடகத்துறைக்குள் குதித்து பல்வேறு சாதனைகளையும் படைத்து இவர்களைப் போல் ஒருநாள் முன்னின்று சமூகத்திற்கு உள்ள சேவைகளை செய்ய வேண்டும் என்ற அவாவும் மேல எழுந்தது.

இவ்வாறே எமது களப்பயணத்தில் நாம் சந்தித்த சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் அனைவரும் தான் ஊடகத்துறையில் பெற்றுக்கொண்ட அனுபவங்களை எம்முள் ஆழமாய்ப் பதிய வைத்தனர். மொழியும் ஊடகமும் ஒரு சந்ததியினரை உருவாக்கவும் உருக்குலைக்கவும், சீரழிக்கவும் சீர்மைப்படுத்தவும் எமக்கு கிடைக்கப்பெற்ற சிறந்த ஆயுதங்கள். அதனை சரியான முறையில் பயன்படுத்தி நாளைய சந்ததியினருக்கு சிறந்த உலகை காண்பிப்பது எமது கடமை. எமது எழுத்தாணி கலை பேரவை மேற்கொண்டது போன்ற காத்திரமான செயல்பாடுகள் ஊடகவியலாளர்கள் மத்தியிலும் ஏனைய மக்கள் மத்தியிலும் நிச்சயமாக முன்னெடுக்கப்பட வேண்டும், இவ்வாறான அரச சார்பற்ற தனியார் தொண்டு நிறுவனங்களின் செயற்பாட்டிற்கு அரசாங்கமும் ஏனைய தரப்பினரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். அப்போதுதான் நாளைய விடியலிலாவது சிறந்த நல்லிணக்கமும் சமத்துவமும் சகவாழ்வினையும் உடைய சிறந்த சந்ததிகளை எம்மால் கண்டுகொள்ள முடியும்.

எனவே இரண்டாம் மொழியை கற்றல் என்பது நல்லிணக்கத்தின் அத்திவாரமாக காணப்படுகின்றது.மொழி புரியாமல் இருப்பதனால் ஒருவர் இரண்டாம் மொழியை பேசும்போது சந்தேக உணர்வுடன் பார்க்கவேண்டிய நிலை காணப்படுகின்றது. இதனால் பல விபரீதங்கள் நாட்டில் நடந்தன. அவற்றையெல்லாம் அடியோடு ஒழிக்க மூவின சமூகத்தினரும் இம்மொழியை கற்க வருவதானது நாடென்ற அடிப்படையில் வெற்றிக்கான படிக்கல்லாக இதனை கருத முடியும்.

ஆக்கம்:-தாஹா மொஹமட் பௌசுல் நஸ்மீறா,றொட்டவெவ, திருகோணமலை

## திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை - 26


# சிலம்பக் கலையின் மூத்த கலைஞர் செல்வராசா பூபாலசிங்கம்

# கலைஞரின் சாதனைக் கலைப் பயணம்

சிலம்பம் என்ற பெயர் சிலம்பு என்ற வார்த்தையில் இருந்து உருவானது. சிலம்பு என்பதற்கு ஒலித்தல் என்று பொருள். சிலம்பம் ஆடும் போது உருவாகும் ஒலிகளை குறிக்கும் விதமாக சிலம்பம் என்ற பெயர் சூட்டப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. அக்காலத்து மக்கள் விலங்குகளிடம் இருந்து தம்மை காத்துக் கொள்ள சிலம்பக் கலையை பயன்படுத்தினர். தமிழர்கள் ஆயுதம் ஏந்திப் போராட ஆரம்பித்த காலத்தில் முதலில் எடுத்தது கம்பு எனப்படும் ஆயுதமே ஆகும். இதுவே பின்னர் சிலம்பம் கலையாக வளர்ச்சி பெற்றது. சிலம்பாட்டத்தில் எதிராளி வீசும் கம்பினைத் தடுத்தல், எதிராளியின் உடலில் சிலம்புக் கம்பினால் தொடுதல் போன்றன அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது. தற்காலத்தில் இக்கலையினை ஆண்கள், பெண்கள் என்று இருபாலரும் கற்று வருகின்றனர்.

அவ்வகையில் திருக்கோணமலையின் வரலாற்றுச் சிறப்புமிக்க, இயற்கை எழில் கொண்ட தம்பலகாமத்தின் பட்டிமேட்டை பிறப்பிடமாகக் கொண்டு செல்வராசா செல்லம்மா தம்பதிகளுக்கு மகனாக 1955 ஆம் ஆண்டு பிறந்தவர் கலைஞர்

செ. பூபாலசிங்கம் ஆவார். இவர் தனது பாடசாலைக் கல்வியினை தம்பலகாமம் புதுக்குடியிருப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கற்றவர். இவரது தந்தையார் பூபாலபிள்ளை செல்வராசாவும், இவரது தந்தையாரின் தந்தை (அப்பப்பா) பூபாலபிள்ளையும் சிலம்பக் கலையில் தேர்ச்சி பெற்ற விற்பன்னர்கள் ஆவர். அவர்களது பரம்பரையின் வாரிசான இக் கலைஞரும் தனது 18ஆவது வயதில் இருந்தே சிலம்பக் கலையில் அதீத ஆர்வம் கொண்டு தனது தந்தையாரை குருவாகக் கொண்டு முழுமையாக பயிற்சி பெற்று இக்கலையில் தன்னை அர்ப்பணித்தார். தம்பலகாமம் பிரதேசத்தில் நடைபெறும் திருமண நிகழ்வுகளிலும், கோவில்



திருவிழாக்களிலும், கலை நிகழ்ச்சிகளிலும் தனக்கான மேடையை அமைத்துக் கொண்டு சமூகத்தின் மத்தியில் தனக்கென்ற ஓர் அடையாளத்தை பெற்றுக் கொண்டவராவார். இக்கலைஞர் திருக்கோணேஸ்வரம், தம்பலகாமம் ஆதிகோணநாயகர் கோயில்களின் குளக்கோட்ட மகாராசாக்களால் நியமிக்கப்பட்ட மூத்த பூர்வீகக் குடித் தொழும்பாளர்களில் ஒருவராக இருந்து வருகின்றார். இவ்வாறாக சிலம்பக் கலையில் தன்னை அர்ப்பணித்து, தான் வாழும் பிரதேசத்தின் பழமை வாய்ந்த கலையான சிலம்பக் கலையை அதன் தன்மை மாறாமல் பேணி பாதுகாத்து வருபவரான மூத்த கலைஞர் செல்வராசா பூபாலசிங்கம் சுபீட்சம் நிகழ்நிலை பத்திரிகையின் திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை என்ற பகுதிக்கு வழங்கிய செவ்விகாணலை இங்கு காணலாம்.

**? பரம்பரை வழியாக வந்த இவ் சிலம்பக் கலையை நீங்கள் பயிலுவதற்கான ஆர்வம் எவ்வாறு ஏற்பட்டது? முதல் மேடை சந்தர்ப்பம் பற்றி கூறுவீர்களா?**

தமிழர்களின் வீர விளையாட்டு இக்கலை. எதிரியிடமிருந்து தன்னை தற்காத்துக் கொள்ள உருவானதே சிலம்பம். தம்பலகாமம் பிரதேசத்தில் அக்காலங்களில் இவ் சிலம்பக் கலையை திருமண வைபவங்களிலும், கோவில் திருவிழாக்களிலுமே காண முடிந்தது. அதனைப் பார்த்து கண்டுகளித்த நிமித்தம் எனக்குள் ஏற்பட்ட ஆர்வமும், பரம்பரை வழியாக வந்த கலைத் தாற்பரியமும் என்னை இக்கலையை பயில்வதற்கான ஆர்வத்தை தூண்டியது. அதன் நிமித்தம் எனது தந்தையாரை குருவாகக் கொண்டு முறைப்படி முழுமையாகக் கற்றேன். இதனுடன் சீனடிக்கலை, குச்சிப்புடி, சிலம்பு சிறுத்தாக்காலி போன்ற கலைகளையும் பயின்றேன். எனது 22ஆவது வயதில் என் நண்பர் ஒருவரின் திருமண நிகழ்வில் எனது சிலம்பக் கலையை மேடையேற்றுவதற்கான முதல் சந்தர்ப்பம் கிடைத்தது. பயன்படுத்



தினேன். வெற்றி கொண்டேன். பாராட்டுக்களையும் பெற்றேன்.

**? உங்களது அனுபவ வாயிலாக சிலம்பக் கலையினை கற்க விரும்பும் ஒருவர் அறிந்திருக்க வேண்டிய நுணுக்கங்கள் பற்றி கூறுவீர்களா?**

கம்பு வீசும் திறன், காலடி அசைவு, வேகம் இவை மூன்றுமே சிலம்பத்தின் அடிப்படை திறன்கள். சிலம்பக் கலை என்பது தனியாள் பயிற்சியாகும். இக் கலையை கற்கும் போது மிகுந்த அவதானம் தேவை. அவதானம் இல்லாது விட்டால் ஆபத்து விளைய நேரிடும். எனவே, இக்கலையை முறையாக பயிற்சி பெற்ற ஒரு குருவிடமே கற்க வேண்டும். விளையாடும் கம்பின் அளவு விளையாடுபவர் உயரத்திற்கே இருக்க வேண்டும். கம்பு பிரம்பு அல்லது மூங்கிலாக இருக்கலாம். கம்பு சுத்தமாகவும், வழுவழுப்பு அற்றதாகவும் இருக்க வேண்டும். விளையாடும் போது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இடது கால் முன்னிருக்க வேண்டும். சிலம்பு விளையாட்டில் மிகவும் முக்கியம் விழிப்பு. விழிப்பு கொஞ்சம் மாறினால் பெரும் ஆபத்து ஏற்படும். சிலம்பு விளையாடும் ஒவ்வொருவருக்கும் விழிப்பு இல்லாவிட்டால் சிலம்பு விளையாட முடியாமல் போய்விடும். வெற்றி ஏற்படாது என்பது உறுதி. என்னுடைய குருவும் எனக்கு முதலில் கற்றுத் தந்த விடயம் விழிப்பே!. அடுத்ததாக தடுப்பும் மிக அவசியம். எதிரி செய்யும் முறையைத் தன்மேல் படாமல் தடுத்து நிறுத்தும் முறை தடுப்பு அல்லது மறுப்பு என்று பெயர். இவ்வாறாக பல விடயங்கள் கவனத்தில் கொள்ள வேண்டியது இக்கலையில் நிறைவாகவே உள்ளது. இவற்றை பயிற்சியின் மூலமே விளக்கமாக கொடுக்க முடியும்.

**? இவ் சிலம்பக் கலையை நீங்கள் பிறருக்கு கற்றுக் கொடுத்து வருகிறீர்களா?**

ஆரம்ப காலங்களில் தம்பலகாமத்தைச் சேர்ந்த இக் கலையில் ஆர்வம் கொண்டு பயிற்சி பெற வருபவர்களுக்கு கற்றுக் கொடுத்து வந்தேன். அத்துடன் நானும் தொடர்ச்சியாக இக்கலையின் பயிற்சிகளை திரும்பத் திரும்ப எனக்குள் செய்து கொண்டே வந்தேன். தற்சமையம் உடல் நிலையின் தாக்கம் காரணமாக பயிற்சி கொடுத்து வரவில்லை. எக்கலையையும் நம்மிடம் கற்க விரும்பி வருபவர்களுக்கு முழுமையாக கற்றுக் கொடுப்பவரே ஆசான் என்பது எனது கருத்து. எனினும் இக்கலை சார்ந்த விடயங்கள் பற்றி கேட்டு வருபவர்களுக்கு என்னால் முடிந்த விளக்கங்களையும், ஆலோசனைகளையும் கொடுத்து வருகின்றேன்.

**? சிலம்பக் கலையில் உங்களுக்குப் பிடித்த வகை பற்றி கூறுவீர்களா?**

எனக்கு மிகவும் பிடித்த வகையாக அலங்காரச் சிலம்ப விளையாட்டுகளை கூறலாம். இவ்வகையானது காட்சிக்காக அரங்கேற்றுவது ஆகும். இதனை நான் திருமண வீடுகளிலும் கோவில் திருவிழாக்களிலும் அதிக அளவில் மேடையேற்றி இருந்தேன்.

**? நீங்கள் வாழ்கின்ற தம்பலகாமம் கிராமத்தில் உங்கள் கலைக்கான வரவேற்பு எவ்வாறு உள்ளது எனக் கூறுவீர்களா?**

எனது தந்தையாரின் பெயருக்கென்று ஒரு மதிப்பும், மரியாதையும் இன்றும் எமதிடத்தில் உள்ளது. அதுபோலவே எனக்கும் எனது கலை மூலமான மதிப்பு நிறைவாகவே உள்ளது. காரணம் அவர் என் தந்தை மட்டுமல்ல எனது குருவுமே. கலை பரம்பரை மூலமாக கிடைத்த வரவேற்பே இன்று எனக்கு கிடைத்த அங்கீகாரமாக கருதுகின்றேன்.

**? இக்கலைத்துறையில் உங்களுக்கு கிடைத்த வெற்றிகள், விருதுகள் குறித்து கூறுவீர்களா?**

முன்னைய காலங்களில், இவ் சிலம்பக் கலையினைக் கொண்டு வாழும் கலைஞர்களுக்கு விருதுகள் எதுவும் தருவதில்லை. ஆனால் எம்போன்ற கலைஞர்களுக்கு மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி



கௌரவத்தை தருவார்கள். எங்களுடைய சிலம்பாட்டத்தை பார்த்து மக்கள் சமூகம் வழங்கிய கைத்தட்டல்களும், பாராட்டுக்களுமே எம் போன்ற கலைஞர்களுக்கான விருதுகளாகக் கூறலாம்.

**? சிலம்பாட்ட தற்காப்புக் கலையை கற்கும் ஒருவர் அடையும் பயன்கள் பற்றி கூறுவீர்களா?**

சிலம்பாட்டமானது ஒரு சிறந்த உடற்பயிற்சி. இது ஆண்கள், பெண்கள் என இரு பாலருக்கும் நல்ல உடற்பயிற்சியாக இருக்கும். கம்பு எடுத்து சுழற்றும் போது உடலில் உள்ள ஒவ்வொரு நாடி, நரம்பும், தசைகளும் இயக்கப்படுகின்றன. இதனால் நம் உடலின் வலிமையும், சுறுசுறுப்பான ஆற்றலும் அதிகரிப்பதோடு மன அழுத்தம் இல்லாத ஓர் உற்சாகம் நிறைந்த ஓர் புத்துணர்வு உண்டாகும். வயோதிப காலத்திலும் இளமையாக நோய் நொடியின்றி சுபீட்சமான வாழ்க்கை முறையை வாழ இவ் கலை நமக்கு அளிக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**? இன்றைய காலகட்டத்தில் பெண்கள் தற்காப்பு கலையை பயில வேண்டும் என்பதன் அவசியம் பற்றியும், அதனால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் கூறுவீர்களா?**

இன்றைய காலகட்டத்தில் பெண் பிள்ளைகள் கல்விக்காகவோ, தொழில் துறைக்காகவோ தனித்து வாழ வேண்டிய சூழலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர். இவ்வாறான சூழ்நிலையில் தற்காப்பு கலையை பெண்கள் அறிந்திருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். பெண் பிள்ளைகள் தங்களை பாதுகாத்துக் கொள்ளவும், சமூகத்தில் பயமின்றி நடமாடவும் தற்காப்புக் கலைகள் உதவிகரமாக இருக்கும். இவ் தற்காப்பு கலையினை கற்று தேர்ந்திருந்தால் சடுதியாக வரும் ஆபத்தையோ, அல்லது பெண்களுக்கு எதிரான ஒரு வன்முறையிலோ இருந்து தங்களை சுயமாக பாதுகாத்துக் கொள்வதற்கு இவ் தற்காப்பு கலை உதவி செய்யும் என்பதை உறுதியாக கூற முடியும். இதன் மூலம் மன உறுதி கொண்ட பெண்கள் உடலளவிலும் துணிச்சலாக தங்களை சுயமாக பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பது உண்மை.

**? பாரம்பரிய கலைகளின் அண்மைக்கால போக்கு பற்றி கூறுவீர்களா?**

அக்காலத்தில் நாம் இன, மத பேதமின்றி ஒற்றுமையாகவும், சுதந்திரமாகவும் வாழ்ந்து வந்தோம். ஆனால் பின்னர் ஏற்பட்ட யுத்த பிரச்சினைகள், இன, மத மோதல்களால் ஏற்பட்ட அதிகப்படியான நெருக்கடியான சூழ்நிலை உருவாகியதால் எமக்கான பாரம்பரிய கலைகளை வெளிக் கொண்டு வர வேண்டிய பாரிய பொறுப்பு எம்மிடத்தில் ஏற்பட்டுள்ளது. அதனை நாம் வெளிக்கொண்டு வருவது மட்டுமல்லாமல் முறையாக ஆவணப்படுத்த வேண்டும் என்பது எனது கருத்து.

**? கலைத்துறையில் உங்கள் பிள்ளைகளின் பங்களிப்பு எவ்வாறு உள்ளது எனக் கூறுவீர்களா?**

எனது இளைய மகன் ஜெயதீபன். சிலம்பக் கலையை என்னிடம் முழுமையாக கற்றுக் கொண்டார். அவரின் உடல் நிலையில் ஏற்பட்ட பிரச்சினையால் அதனைத் தொடரவில்லை. எனது மூத்த மகன் பிரதீபன் நாடகத் துறை, எழுத்துத்துறை, இலக்கியத்துறை, யோகா என பல்துறை கலைஞராக தன்னை அடையாளம் கொண்டு தடம் பதித்து வருகின்றார்.

**? தற்காலத்தில் இளம் சமுதாயத்தினர் தற்காப்புக் கலையை விரும்பி கற்று வருகின்றனர். இது குறித்து உங்களது கருத்தைக் கூறுவீர்களா?**

மிகவும் வரவேற்கத்தக்க விடயம். அழியும் விளிம்பில் இருந்த எமது பண்டைய தற்காப்பு கலையினை இன்று சிறுவர்கள் முதற்கொண்டு இளம் சமுதாயத்தினர் வரை கற்று வருவது ஒரு சிறந்த விடயமே. உடலும் மனதும் நம்முடைய கட்டுப்பாட்டில் செயல்பட வைக்கின்ற இவ் தற்காப்பு கலைகளை முறைப்படி முறையானவர்களிடம் கற்று வரும் வேளையில் நான் முன்னர் கூறிய பயன்களை பெற்றுக் கொள்ள வழிவகுக்கும். நாம் எந்த ஒரு கலையையும் முழுமையாக முறைப்படி கற்று இருந்தால் அதன் நிழல் எம்மைத் தொடர்ந்து கொண்டே செல்வதோடு தக்க சந்தர்ப்பத்தில் கை கொடுக்கும்.

**? நிறைவாக, வளர்ந்து வரும் கலைஞர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது?**

ஒவ்வொரு மனிதரிடத்திலும் ஒவ்வொரு திறமை மறைந்தே கிடக்கும். அதனை வெளிக் கொண்டு வருவதற்கான தக்க சந்தர்ப்பம் கிடைக்கும் பட்சத்தில் அதனை எட்டிப் பிடித்துக் கொள்வதே கெட்டித்தனம். அவ்வகையில் வளர்ந்து வரும் கலைஞர்களும் உங்கள் கலை மூலமாக நம் மண்ணுக்கு பெருமை சேர்ப்பதோடு, அக்கலைகளை பேணி பாதுகாத்து வாருங்கள். உங்களுக்குப் பின் அக் கலை அழிவடையாமல் அடுத்த தலைமுறைக்கு கடத்திச் செல்லுங்கள். உங்களுக்கான மேடைகளை நீங்களே அமைத்துக் கொண்டு உங்கள் திறமையை வெளியுலகிற்கு எடுத்துச் செல்லுங்கள்.

அந்த வகையில், எம் போன்ற கலைஞர்களை வெளிக்கொண்டு வரும் சுபீட்சம் பத்திரிகைக்கு எனது நன்றியினைத் தெரிவிப்பதோடு இப் பணித் தொடர வாழ்த்துகின்றேன்.

நம் இயற்கையோடு ஒன்றிய பழமை வாய்ந்த கலைகளின் ஒன்றான சிலம்பக் கலையின் மூலமாக தன்னை அர்ப்பணித்து அதன் மூலமாக அக்கலையை தனது கிராமத்தில் வாழச் செய்து பல மேடைகளிலும் அக் கலையை அலங்காரம் செய்து நம் திருக்கோணமலை மண்ணிற்கே பெருமை சேர்த்த இவ் மூத்த கலைஞர் நீண்ட ஆயுளோடும், நோய் நொடியில்லா தேகாரோக்கியத்துடன் வாழ வேண்டுமென பிரார்த்தித்து இக் கலைஞரை வாழ்த்துகிறேன்.

நன்றி!



தொடரும்.......

கலைஞர்களுக்கான
தேடலின் பயணத்தோடு

**திருமலை தட்சாயினி ஞானசங்கரன்**